
வானவில்

VAANAVIL

இதழ் 97 | தை 2019

ISSUE 97 | JANUARY 2019

# புதிய அரசியலமைப்பு நிறைவேறி மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்குமா?




இலங்கையில் புதிய அரசியல் அமைப்பு ஒன்று கொண்டு வருவது சம்பந்தமான வாதப்பிரதிவாதங்கள் மீண்டுமொருமுறை ஆரம்பமாகியுள்ளது.

புதிய அரசியல் அமைப்பு நாட்டை இன அடிப்படையில் கூறுபோடப் போகின்றது என எதிர்க்கட்சியினரும், இனப் பிரச்சினைக்கு தீர்வை எட்டப் போகின்றது என தமிழ் தேசியக் கூட்டமைப்பும், புதிய அரசியல் அமைப்பில் புதிதாக எதுவும் இல்லை, ஒற்றையாட்சியும் பௌத்த மதத்துக்கான முன்னுரிமையும் அப்படியே இருக்கும் என அரசாங்க தரப்பும் கூறி வருகின்றன.

இந்த முத்தரப்பினரின் பிரச்சாரங்களுக்கு மத்தியில் வரப்போகும் புதிய அரசியல் அமைப்பில் என்னதான் இருக்கப் போகின்றது என்ற தெளிவில்லாத குழப்பத்தில் மக்களும் இருக்கின்றனர்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை புதிய அரசியலமைப்புக்கான வரைபு என்ற அடிப்படையில் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் சமர்ப்பிக்கட்டது அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் மட்டுமே என அரசாங்கத் தரப்பில் விளக்கம் அளிக்கப்படுகின்றது.

வெளிப் பார்வைக்கு அரசாங்கமும் அதன் பங்காளிக் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பும் புதிய அரசியல் அமைப்பை முற்றுமுழுதாக ஆதரிப்பது போலவும், மகிந்த ராஜபக்ச தலைமையிலான எதிர்க்கட்சி அதை இனவாத அடிப்படையில் எதிர்ப்பது போலவும் பெரும் பிரச்சாரம் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது.

ஆனால் உண்மை அதுவல்ல என்பதை அரசாங்கத்தின் பங்காளிகளில் ஒருவரும், அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்டகால சகாவுமான மனோ கணேசன் அம்பலத்துக்கு கொண்டு வந்துள்ளார். அவர் இரண்டு விடயங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

அதில் முதலாவது விடயம், புதிய அரசியல் அமைப்பு நடைமுறைக்கு வராது என்பதும், அப்படி ஒன்று வந்தாலும் அதன் மூலம் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினை தீர்க்கப்படாது என்பதுமாகும்.

இரண்டாவது விடயம், எதிர்க்கட்சியினர் மாத்திரமின்றி, ஐக்கிய தேசியக் கட்சியினரிலும் பெரும்பாலோர் புதிய அரசியல் அமைப்பு வருவரத விரும்பவில்லை என்பதுமாகும்.

மனோ கணேசனின் இந்தக் கூற்றுகள் உண்மை என்பதை நடைபெறும் சம்பவங்கள் நிரூபித்துள்ளன.

அதாவது, நாட்டின் ஒற்றையாட்சி முறைமை நீக்கப்படாது என பிரதமர் ரணில் உட்பட அரசாங்க தலைவர்கள் பலரும் நாட்டு மக்களிடமும், மகாநாயக்க தேரர்களிடமும் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறியுள்ளனர். எனவே இதன் அர்த்தம் இனப் பிரச்சினைக்கு தீர்வான அதிகாரப் பகிர்வு இல்லை என்பதாகும்.

மற்றது, நாடாளுமன்றத்தில் கட்சிகளின் யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 66 பேர் மட்டுமே பிரசன்னமாகி இருந்துள்ளனர். அதைப் பார்க்கையில் அரசாங்கத் தரப்பில் உள்ள 117 பேரில் பலர் அந்தச் சந்தர்ப்பத்தில்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

நூறு சிந்தனை மலரட்டும்

# ஒன்பதாவது வருடத்தில் காலபதிக்கும் வானவில்

2011 ஆம் ஆண்டிலிருந்து வெளிவர ஆரம்பித்த 'வானவில்' தனது ஒன்பதாவது ஆண்டுப் பயணத்தை இந்த இதழில் வெற்றிகரமாகத் தொடங்கியுள்ளது. ஓர் ஊடகத்தினை, அது பத்திரிகை மற்றும் சஞ்சிகை என்ற வடிவில் இருந்தாலென்ன அல்லது வானொலி, ரெலிவிஷன், இணையத்தளம் போன்றவையாக இருந்தாலென்ன ஆரம்பிப்பது என்பது சுலபம். ஆனால் அதனைத் தொடர்ந்து நடாத்துவதென்பதுதான் மிகவும் கடினமானது, பல சவால்கள் நிறைந்தது. துளியளவிலேனும் வியாபார நோக்கோடு இல்லாமல், மக்களிடம் உண்மையானதும் சரியானதுமான கருத்துக்களை கொண்டு செல்லவேண்டும் என்ற ஒரேயொரு நோக்கோடு மாத்திரம் மாதமொருமுறை கனடாவிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'வானவில்' கடந்து வந்த பாதையும் பஞ்சு மெத்தை போன்றதல்ல என்பது 'வானவில்'லின் நிரந்தர வாசகர்களுக்குத் தெரிந்ததே.

QQ, Facebook, Twitter, WhatsApp, Instagram, Wechat, SnapChat போன்ற சமூக ஊடகங்கள் வாயிலாக, 24 மணித்தியாலங்களும் உலகின் ஒவ்வொரு மூலையிலும் நடைபெறுகின்ற அரசியல், சமூக, பொருளாதார, மற்றும் இன்னோரன்ன விடயங்களை உடனுக்குடன் எடுத்துக் காட்டுகின்ற நிலைமைக்கு வெகுஜன தொடர்பு சாதனங்கள் வளர்ச்சி அடைந்து விட்டன. குறிப்பாக கணனியை கையாளச் சிரமப்பட்டவர்கள், கைப்பேசியிலேயே சகல நிலவரங்களையும் விரல்களால் தடவி இலகுவாகப் பார்க்கின்றனர். இந்த நிலைமையில் 'வானவில்' போன்ற மாத வெளியீடுகளால் என்ன பயன் என்ற கேள்வி இன்று பலரிடையே எழுவது தவிர்க்க முடியாதது. ஆனால் இக்கேள்வியை எழுப்புபவர்கள் பொதுவாக வளர்ச்சியடைந்த நாடுகளை வதிவிடமாகக் கொண்டவர்கள். மேலும் இவர்கள் கணனியிலும் கைப்பேசியிலும் தெரிகின்ற சமூக ஊடகங்களுக்கு அப்பால் எதனையும் கண்டு கொள்ளாதவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலே குறிப்பிட்ட சமூக ஊடகங்களில் மூழ்கியிருக்கும் வசதி படைத்தவர்கள் மிகவும் முக்கியமான விடயத்தைக் கவனிக்கத் தவறுகின்றனர். அதாவது வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள முதியவர்களும் இலங்கை போன்ற மூன்றாமுலக நாடுகளில் வாழ்பவர்களில் வசதியற்ற கணிசமானோரும் இன்னமும் அச்சு ஊடகங்களையே நம்பியிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடுகின்றனர். அத்துடன் சமூக ஊடகங்கள் வாயிலாக குறுகிய தகவல்கள் அல்லது சிறிய, நடுத்தரவகைச் செய்திகள், கட்டுரைகளே வெளியிடப்படுகின்றன. ஆழமாக அலசி ஆராயப்படும் அரசியல், சமூக, பொருளாதார, அறிவியல் சார்ந்த விடயதானங்கள், இலக்கியப்படைப்புகள் என்பன என்றென்றும் தொடர்ந்தும் அச்சில் பதிக்கப்படும். மேலும் அவற்றினை அச்சில் பதிப்பதினூடாகவே வாசிக்கவும் முடியும் என்பதையும் அவர்கள் உணரத் தவறிவிடுகின்றனர்.

குறிப்பிட்ட ஓர் ஊடகம் உண்மையைத் திரித்துக் கூறிவிட்டதாக அல்லது பொய்யை எழுதிவிட்டதாக குற்றஞ்சாட்டுபவர்களையும் அவ்வாறு குற்றஞ்சாட்டப்படும் ஊடகங்களையும் நாங்கள் ஊடகங்கள் வாயிலாகவே அறிகின்றோம். சிலவேளைகளில் ஊடகங்கள் தவறுதலாக செய்தியை வெளிவிட்டுவிட்டோமென மன்னிப்புக் கோருவதையும் காண்கின்றோம். ஒரு சில சந்தர்ப்பங்களில் ஊடகங்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யபட்டு, ஊடகங்கள் பெருந்தொகைப்பணத்தை நட்டஈடாகச் செலுத்துவதையும் பார்த்திருக்கின்றோம். ஆனாலும் பல சந்தர்ப்பங்களில், ஊடகங்கள் பல உண்மைகளை புட்டுப்புட்டு எழுதியதால் ஊடகங்கள் கண்டனத்திற்குள்ளாகின்ற சம்பவங்கள் நடந்தேறி வருகின்றன.

தங்களைப்பற்றிய உண்மைச் செய்திகளை ஊடகங்கள் வாயிலாக பகிரங்கப் படுத்தப்படுவதை பொதுவாக பிரபல்யங்கள் விரும்புவதில்லை. அதனாலேயே அச்செய்திகளை 'பொய்' என்று கூறி, ஊடகங்களை தாக்குபவர்களைக் காண்கின்றோம். இதற்கு சிறந்த உதாரணம் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப். இவர் பதவிக்கு வந்து கடந்த இரண்டு வருடங்களில், நடந்து முடிந்த அமெரிக்க ஜனாதிபதித்தேர்தல் தொடர்பாகவும் தன்னைப் பற்றியும் தனது நிர்வாகத்தை கடுமையாக விமர்சித்தும் வெளிவரும் செய்திகளை 'fake news' என்ற ஒரேயொரு வார்த்தையால் சாடி வருவது யாவரும் அறிந்ததே.

அண்மைக்காலமாக இலங்கை அரசியலில் 'கறுப்பு ஊடகம்' என்றதொரு வார்த்தைப் பிரயோகம் பலவித ஊடகங்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்டு வருகின்றது. குறிப்பாக தற்போதைய இலங்கைப்பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் போன்ற ஒரு சிலராலேயே இது அடிக்கடி பாவிக்கப்பட்டு வருகின்றது. கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 26ந் திகதி நிகழ்ந்த திடீர் ஆட்சிமாற்றத்தின்போது, ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்த ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியிலிருந்து அகற்றப்பட்டு, புதிய பிரதமராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த மகிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்டார். அந்நிகழ்ச்சிக்குப் பின்னர் தங்கள் தரப்புச்செய்திகளை நாட்டின் ஊடகங்கள் முறையாக வெளிக்கொணரவில்லை என்று குற்றஞ்சாட்டியே ரணில் ஊடகங்களை தாக்கிப்பேசி வருகின்றார். பதவி நீக்கம் செய்யப்பட்ட ரணிலை மீண்டும் பதவிக்கு கொண்டுவருவதில் த.தே.கூ. சார்பில் முதுகெலும்பாகச் செயற்பட்ட எம்.ஏ.சுமந்திரன், அண்மையில் வீரசிங்கம் மண்டபத்தில் ஆற்றிய உரையில், தான் பிரிவினைக்கு ஆதரவாக உரையாற்றியதாக பொய்ச்செய்தியை வெளியிட்டதாக தென்னிலங்கை ஊடகக் குழுமமொன்றினை கடுமையாகச் சாடினார். ஆனால் அந்த ஊடகம், அவர் '(நாடு) பிரிந்தாலும் பிரியலாம்' எனக் கூறிய அவரது உரையின் காணொளியை வெளியிட்டு அவருக்குப் பதிலடி கொடுத்துள்ளது.

ஒன்பதாவது ஆண்டில் காலபதிக்கும் இந்தவேளையில், தமிழ் ஊடகத்துறையில் நாம் செலுத்திவரும் மிகமிகச் சிறிய பங்களிப்பினை எப்போதும் ஆதரித்தும் ஊக்குவித்தும் வரும் வாசகர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

**புத்தாண்டு – தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!**

*'வானவில்' வாசகர்கள் அனைவருக்கும் 2019ம் ஆண்டு புத்தாண்டு வாழ்த்துக்களையும், தைப்பொங்கல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

***'வானவில்' ஆசிரியர் குழு***

# தமிழரசு கட்சியை தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும்!

**(புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வார ஏடான 'தொழிலாளி' பத்திரிகையில் 50 வருடங்களுக்கு முன் வெளியான இக்கட்டுரை, தமிழரசுக் கட்சியின் இன்றைய அரசியல் நிலைக்கும் பொருத்தமாக இருப்பதால் வாசகர்களுக்காக மீள் பிரசுரம் செய்யப்படுகிறது – வானவில்)**




தனது முன்னாள் தலைவர்களில் ஒருவரான ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர் திரு.நவரத்தினம் கூறிய அறிவுரையை ஏற்று தமிழரசுக் கட்சி எவ்வளவு விரைவாக தற்கொலை செய்து கொள்கிறதோ, அவ்வளவு தமிழ் மக்களுக்கும் முழு இலங்கை மக்களுக்கும் நல்லதாகும். தமிழரசுக் கட்சி நீண்ட காலமாக தமிழ் மக்களை ஏமாற்றி வந்துள்ளது. பாராளுமன்ற அரசியல் விளையாட்டில், அது விளையாட எடுத்த முயற்சியின் வங்கலோட்டுத்தனமும் நன்கு அம்பலமாகிவிட்டது.

கடந்த 1956 ம் வருடத்திற்குப் பிறகு இன்றுவரை தமிழரசுக் கட்சி மூன்று தடவைகள் சிங்கள முதலாளித்துவ கட்சிகளால் ஏமாற்றப்பட்டுள்ளது. முதலில், அது நம்பிக்கை வைத்திருந்த சிங்கள மத்தியிலுள்ள பிற்போக்கு, வகுப்புவாத, குறுகிய தேசியவாத சக்திகளின் நெருக்குதலினால், காலஞ்சென்ற எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா தான் செல்வநாயகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார்.

இரண்டாவதாக, மாவட்ட சபைகள் ஏற்படுத்தப்படும் என்று அடுத்தடுத்து சிம்மாசனப் பிரசங்கத்தில் கொடுத்த வாக்குறுதியை திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா காப்பாற்றவில்லை. மூன்றாவதாக, இப்பொழுது கனவான் டட்லி சேனநாயக்கா, "தேசிய" அரசாங்கம் ஏற்படுவதற்கு அடிப்படையாயிருந்த தமிழரசுக் கட்சிக்குத் தான் கொடுத்த ரகசிய வாக்குறுதியை கைவிட்டுவிட்டார்.

முதலாளித்துவ அரசியல்வாதிகளின் பெருமிதமான வாக்குறுதிகள், எழுதப்பட்ட தாளின் பெறுமதிகூட இல்லை என்பதை, தமிழரசுக் கட்சி தனது செல்வாக்கை இழந்து கற்றுக் கொண்டுள்ளது. இந்த நிலைமைக்கு வேறு யாரையுமல்ல, தமிழரசுக் கட்சி தன்னைத்தானே குற்றஞ்சாட்டிக் கொள்ள வேண்டும். பாராளுமன்றத்தில் ஒரு தனி அரசியல் கட்சியும் கூடுதலான பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்ற முடியாமல் இருந்த நிலையில், காலஞ்சென்ற எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் கொலைக்குப் பின் வளர்ந்து வந்த அரசியல் நிலைமையை தமிழரசுக் கட்சி பயன்படுத்திக் கொண்டு பாராளுமன்ற அரசியல் விளையாட்டை விளையாட முயன்றது. மந்திரிசபையை உருவாக்கும் சூத்திரதாரியாக வர எண்ணியது. 1960 மார்ச்சில் திரு.டட்லி சேனநாயக்காவின் சிறுபான்மை அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு எதிர்க்கட்சியுடன் ஒத்துழைத்தது. 1964 டிசம்பரில் கூட்டரசாங்கத்தை வீழ்த்த அது யு.என்.பியுடன் சேர்ந்தது. 1965 மார்ச்சில் பூரணமான பெரும்பான்மை கிடைக்காத யு.என்.பியுடன் தனது வர்க்க நலனின் அடிப்படையில் ஒன்றுசேர்ந்து, யு.என்.பி. தலைமைப்பீடத்துடன் இரகசிய ஒப்பந்தம் செய்து அரசாங்கம் அமைக்கவும் உதவி புரிந்தது.

இம்மட்டல்ல, எல்லா வேளைகளிலும், சிங்கள மக்கள் மத்தியிலுள்ள முற்போக்காளர்களிடமும், புரட்சிகரப் பகுதிகளிடமும் – முக்கியமாக தொழிலாளி – விவசாயி மக்களில் நம்பிக்கை வைக்கவோ, அல்லது உதவி கோரவோ தமிழரசுக் கட்சி உறுதியாக மறுத்து வந்துள்ளது. உண்மையில் அதன் கொள்கைகளும், நடவடிக்கைகளும் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள முற்போக்குப் பகுதியைச் சினமூட்டவே செய்தன.
திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலமும், அவரது தமிழ் காங்கிரசும் விட்ட இடத்திலிருந்து, தமிழரசுக் கட்சி பலகாலமாக தீவிரமான, இரத்தம் உறையும் சிங்கள எதிர்ப்பு வகுப்புவாதத்தில் (இனவாதத்தில்) முக்குளித்தது. இப்படித்தான் அவர்கள் சமஸ்டியைக் கோரினார்கள் ~ சாதாரண சந்தர்ப்பங்களில் இக் கோரிக்கை தீங்கானதல்ல – இது சிங்கள மக்களுக்கு வெறுப்பான ஒன்று.

பாராளுமன்றத்தில் பண்டாரநாயக்கா அரசாங்கங்களால் கொண்டு வரப்பட்ட ஒவ்வொரு முற்போக்கு மசோதாவையும் – நெற்காணி மசோதா, பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றல், அந்நிய எண்ணெய் கம்பனிகளைத் தேசியமயமாக்கல், இன்சூரன்ஸ் கம்பனிகளைத் தேசியமயமாக்கல் ஆகியவற்றையெல்லாம் – எதிர்த்தனர். திருகோணமலைத் தளத்திலிருந்த பிரிட்டிசாரை வெளியேறும்படி காலஞ்சென்ற எஸ்.டபிள்யு. ஆர்.டிபண்டாரநாயக்கா கேட்ட போது, தமிழரசுக் கட்சி அதற்கெதிராக இராணிக்கு மனு அனுப்பியது. "சுதந்திர" தினத்தில் அக்கட்சியினர் சீற்றத்துடன் கறுப்புக் கொடியைப் பறக்க விட்டார்கள்.

எல்லா நடவடிக்கைகளிலும் தமிழ் மக்களின் நலன்களை – வடக்கிலும் சரி, கிழக்கிலும் சரி, அல்லது தோட்டப் பகுதிகளிலும் சரி – தமிழரசுக் கட்சி பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. சமூக ரீதியாகப் பழமை வாய்ந்ததும், மிகவும் பிற்போக்கானதுமான யாழ்ப்பாணத் தமிழ் மக்களது நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ பகுதியின் நலன்களையே அது பிரதிநிதித்துவப்படுத்தியது. ஆதனால்தான் சிங்கள மக்களின் வயற்றில் அடித்தது போல தமிழ் மக்களின் வயற்றிலும் அடித்த கூப்பன் அரிசியைப் பாதியாக வெட்டிய ஆட்சியின் நடவடிக்கையை எதிர்த்துக் குரல் எழுப்பவில்லை. ரூபாவின் மதிப்பு குறைக்கப்பட்டதையும், அதனைத் தொடர்ந்து சமாளிக்க முடியாத அளவுக்கு வானாளாவ

உயர்ந்துள்ள விலைவாசி உயர்வையும் பற்றி ஒரு எதிர்ப்பையும் காட்டவில்லை. வட பகுதியில் தீண்டாமைக்கும் சாதி ஒடுக்குமுறைக்கும் எதிராக தாழ்த்தப்பட்ட மக்கள் நடத்தும் இயக்கங்களுக்கு ஆதரவாக ஒரு சின்னி விரலைத்தானும் உயர்த்தவில்லை. சிறுபான்மை இன மக்களுக்கு, குறிப்பாக இந்திய வம்சாவழியைச் சேர்ந்த நாடற்ற பிரஜைகளான தொழிலாளர்களுக்குச் சொல்ல முடியாத இன்னல்களை விளைவிக்கும் என்று தெரிந்தும் கூட அடையாள அட்டை மசோதாவுக்கு வெளிப்படையாக தமிழரசார் ஆதரவு கொடுத்தார்கள். இதனால் இந்திய வம்சாவழித் தொழிலாளர்கள் தமது நாடற்ற தன்மையை மெய்ப்பிக்கும்படி கேட்கப்படுவார்கள். தமிழரசார் பங்காளிகளாக இருக்கின்ற இதே அரசாங்கம்தான் வட பகுதி மக்களைத் தொல்லைக்குள்ளாக்கும் – அவர்கள் அனைவரும் கள்ளக்கடத்தல்காரர்கள் என்று அவமானப்படுத்தும் பொருட் கட்டுப்பாட்டுச் சட்டத்தைக் கொண்டு வந்தது.

தெளிவாக, தமிழரசுக் கட்சி தமிழ் மக்களை கொல்லைப்புறத்துக்கு இட்டுச் சென்றுள்ளது. அது தமிழ் மக்களுக்குச் செய்தது ஒன்றே ஒன்றுதான். சிங்கள மக்களிடையே உள்ள வகுப்புவாதிகளுக்கும், குறுகிய தேசியவாதிகளுக்கும் தீனி போட்டு அவர்களின் பெரும் பகுதியினரின் எதிர்ப்பைத் தேடிக் கொடுத்ததுதான் அது. சிங்கள வகுப்புவாதமும், தமிழ் வகுப்புவாதமும் ஒன்றிலிருந்து ஒன்று வளர்கிறது என்பது நன்கு தெரிந்த விசயமாகும்.

தமிழரசுக் கட்சியின் தலைமைப்பீடமும், அதன் கொள்கைகளின் வங்குரோட்டுத்தனமும் இன்று நாடு முழுவதும் அம்பலமாகிவிட்டது. எனவே, தமிழரசுக் கட்சித் தலைமைப்பீடத்தின் வங்கலோட்டுத்தனத்தையும், அதன் பிற்போக்கு, வகுப்புவாதக் கொள்கைகளையும் உதறித் தள்ளிவிட்டு சிங்கள மக்கள் மத்தியில் உள்ள புரட்சிகர பகுதியினருடன் ஒத்துழைப்பதிலும், நட்புறவு கொள்வதிலும் நம்பிக்கை வைக்கும் காலம் தமிழ் மக்களுக்கு வந்துவிட்டது. இவ்விரு பகுதியினரின் வர்க்க நலனும் ஒன்றே. எதிரியும் ஒன்றுதான் – வெளிநாட்டு ஏகாதிபத்தியமும் அதன் வேட்டை நாய்களுமே. தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலுள்ள புரட்சிகர அரசாங்கத்தின் கீழ் மட்டுமேயல்லாது, முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தின் கீழ் தமது உண்மையான உரிமைகளை வென்றெடுக்க முடியாதென்பதைத் தமிழ் மக்கள் நன்கு அறிய வேண்டும். சகலருக்கும் பொருளாதார உத்தரவாதமுள்ள சோசலிச அரசின் கீழ் மட்டுமே சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும்.

தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியின் தலைமையை உதறித்தள்ளுவதற்கு, சிங்கள மக்களின் மத்தியிலுள்ள முற்போக்கு உணர்வும், புரட்சிகர உணர்வும் வாய்ந்த பகுதிகளுக்குச் சமமான பொறுப்பு உண்டு. எல்லாத் தமிழ் மக்களும் தமிழரசுக்காரரல்ல என்பதைச் சிங்கள மக்கள் உணர வேண்டும். தமிழரசுக் கட்சியின் பிற்போக்கு, வகுப்புவாதக் கொள்கைகளை எதிர்க்கும் தமிழ் மக்கள் கணிசமாக உள்ளனர். ஆனால், பொறுப்பற்ற, சந்தர்ப்பவாத, குறுகிய தேசியவாத சிங்கள அரசியல்வாதிகளால் உரத்துப் போடப்படும் வகுப்புவாதக் கூச்சல்களால் அவர்கள் தமது கருத்துக்களை உரத்துக்கூற முடியாதுள்ளனர்.

சிங்கள தமிழ் மக்களிடையே உள்ள பிற்போக்குவாதிகள் தமது வர்க்க நலன்களின் அடிப்படையில் ஒன்று சேர முடியுமானால், இரு பகுதியிலுமுள்ள புரட்சியாளர்களும் ஒன்றுசேர முடியும். இதுதான் இன்று தேவைப்படும் உடனடிக் காரியமாகும் – புரட்சிகரத் தலைமையின் கீழ் சிங்கள, தமிழ் வெகுஜனங்களின் ஒற்றுமையைக் கட்டி வளர்ப்பதாகும்.

**தொழிலாளி – 1968 யூலை 17**

# மாணவர்களின் எதிர்ப்பால் ரணில் பயணம் செய்த ஹெலி தரையிறங்க முடியாத நிலை!

**மா**ணவர்கள் காட்டிய எதிர்ப்பால் இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஏற்றிச் சென்ற ஹெலிகொப்ரர் ஒன்று குறிப்பிட்ட இடத்தில் தரையிறங்க முடியாமல் வேறொரு இடத்தில் தரையிறங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் சப்ரகமுவ மாகாணத்தின் தலைநகராக விளங்கும் இரத்தினபுரியிலுள்ள வைத்தியசாலையை போதனா வைத்தியசாலையாக தரமுயர்த்தும் வைபத்தில் கலந்து கொள்வதற்காகவும், சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை புதிதாக அங்குரார்ப்பணம் செய்யும் வைபத்தில் கலந்து கொள்வதற்காகவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஹெலிகொப்ரர் மூலம் இரத்தினபுரி சென்றிருந்தார்.

அவர் பயணம் செய்த ஹெலி இரத்தினபுரி சீவலி மத்திய கல்லூரி மைதானத்தில் தரையிறங்குவதாக இருந்தது. ஆனால் அவரது வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் ஹெலியை குறிப்பிட்ட இடத்தில் தரையிறக்க முடியாமல் அருகில் இருந்த குருவிட்ட பகுதியிலுள்ள பாடசாலை மைதானம் ஒன்றில் தரையிறக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

ரணில் சீவலி மத்திய கல்லூரி மைதானத்தில் இறங்கிய பின்னர் அவர் பயணம் செய்யவிருந்த காரை வழிமறித்து நகரவிடாது தடுப்பதற்கே மாணவர்கள் திட்டமிட்டிருந்ததாகவும், ஆனால் இதை முன்கூட்டியே அறிந்துகொண்ட அதிகாரிகள் ஹெலி தரையிறங்கவிருந்த இடத்தை மாற்றியதாகவும் தெரிய வருகிறது.

**‘சிவப்பு ரோசாவும் இனி இல்லையே**

**அவர் புதையுண்ட இடமும் புலப்படவில்லையே**

**வாழ்வின் பொருளை அவர் வறியோர்க்கு ஈந்தாரே**

**பொருள்படைத்தோர் அவரைத் துடைத்தெறிந்தனரே’**

(ரோசா லக்சம்பேர்க்கின் நடுகல்லில் எழுதப்பட்டுள்ள வாசகம்)

# இது அபாயகரமான போக்கு!

இலங்கையில் அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின் போது காணாமல் போன தமது உறவுகளைக் கண்டுபிடித்துத் தரும்படி தமிழ் பொதுமக்கள் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக பலவிதமான போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இப்படி போராட்டங்கள் நடத்தும் பொதுமக்களை காலத்துக்காலம் அரசாங்கத் தலைவர்களும், தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும், சில வேளைகளில் சில வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் சந்தித்து சில வாக்குறுதிகளை வழங்கி வருகின்ற போதிலும், அந்த மக்களின் கோரிக்கைகளில் ஒரு வீதம் தன்னும் நிறைவேற்றப்படவில்லை.

இந்தப் பிரச்சினை முடிவின்றி தொடர் கதையாக இழுபடுவதற்கு உண்மையான காரணம், காணாமல் போனவர்களில் பெரும்பாலோர் உயிருடன் இல்லை என்பதே. இந்த உண்மை சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினர்க்கும் தெரிந்திருந்தும் அதை வெளியே சொல்வதற்கு அச்சப்பட்டு மூடி மறைத்து வருகின்றனர்.

“காணாமல் போனோர்” என பொதுவாகக் கூறப்பட்டாலும், இவ்வாறு காணாமல் போனோரில் பல வகைப்பட்டவர்கள் அடங்குகின்றனர். இவர்களில் ஒரு பகுதியினர் உண்மையான பொதுமக்கள். இன்னொரு பகுதியினர் புலிகளின் போராளிகள். அதனால்தான் புலிகளின் திரிகோணமலை முன்னாள் பொறுப்பாளர் எழிலனின் மனைவி அனந்தி சசிதரனும் தனது கணவர் இராணுவத்திடம் சரணடைந்த பின்னர் காணாமல் போயுள்ளார் என்று கூறி இந்தப் போராட்டங்களில் பங்குபற்றி வருகின்றார்.

இவர்கள் எப்படிக் காணாமல் போனார்கள் என்பதிலும் பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. இராணுவம் தமது உறவுகளைக் கொன்றிருக்கலாம் என சில மக்கள் நம்புகின்றனர். இன்னும் சிலர் தமது உறவுகளை இராணுவம் இரகசிய முகாம்களில் தடுத்து வைத்திருக்கிறது என நம்புகின்றனர். ஆனால் முன்னைய மகிந்த ராஜபக்ச அரசாங்கமும் சரி, தற்போதைய ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமும் சரி, அப்படியான இரகசிய முகாம்கள் எதுவும் இலங்கையில் இல்லை என மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் காணாமல் போனதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. புலிப் போராளிகளைப் பொறுத்தவரையில் இறுதி யுத்த நேரத்தில் இராணுவத்திடம் சரணடைந்த சுமார் பதினோராயிரம் பேர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இன்னொரு தொகை புலிப் போராளிகள் இறுதி யுத்த நேரத்தில் செத்து மடிந்துவிட்டனர். அவர்கள் யார் யார் என்பது அவர்களின் உறவினர்களுக்கே தெரியாமல் இருக்கலாம். சிறு பகுதியினர் தமக்கு இருந்த பண மற்றும் பௌதீக வளங்களைப் பயன்படுத்தி முதலில் இந்தியா, தாய்லாந்து போன்ற நாடுகளுக்கும் பின்னர் மேற்கத்தைய நாடுகளுக்கும் தப்பிச் சென்றிருக்கலாம். அப்படியான முக்கிய நபரொருவர், அன்ரன் பாலசிங்கத்துக்கு அடுத்ததாக தன்னை புலிகளின் ஆலோசகராக பாவனை பண்ணித் திரிந்தவர், தமிழ் நாட்டுக்குத் தப்பியோடி, சில காலம் தலைமறைவாக இருந்துவிட்டு, இப்பொழுது துணிச்சலுடன் வெளியே வந்து இலங்கை ஊடகங்களிலேயே கட்டுரைகள் எழுதி வருகின்றார்.

**சந்திரன்**

காணாமல் போன பொதுமக்களின் நிலைதான் பரிதாபகரமானது. புலிகளுக்கெதிராக மன்னாரில் ஆரம்பித்த இராணுவ நடவடிக்கை முன்னேற முன்னேற புலிகள் இவர்களை முள்ளிவாய்க்கால் வரை தமது பாதுகாப்பு கேடயமாகப் பிடித்துச் சென்றார்கள். இறுதிப் போர் நிகழ்ந்த போது இவர்களில் சிலர் புலிகளின் பிடியிலிருந்து தப்பி இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஓடி வந்தனர். சிலரை ஓட விடாமல் புலிகளே சுட்டுக் கொன்றதாக கண்ணால் கண்டவர்கள் கூறியிருக்கின்றனர். காயமடைந்த புலிப் போராளிகளை புலிகள் பல பஸ்களில் ஏற்றிச் சென்று அந்த பஸ்களுக்கு வெடிகுண்டுகளை வீசி அழித்த போது அதில் தெரியாத்தனமாக சில பொதுமக்களும் ஏறிச் சென்று கொலையுண்டதான தகவல்களும் உண்டு.




பொதுமக்களைப் பொறுத்தவரை, இறுதிநேரத்தில் அவர்கள் ஒரே குடும்பங்களாகக் கூட இருக்க முடியாமல் திக்குத்திக்காக சிதறி இருந்துள்ளனர். இப்படியான ஒரு சூழலில் இருதரப்பும் மாறிமாறி ஏவிய எறிகணை வீச்சிலும் துப்பாக்கிச் சூட்டிலும் யார்யார் மரணித்தனர், யார் தப்பினர் என்ற விபரமே தெரிய வரவில்லை. சில குடும்பங்களில் தந்தையும் சில பிள்ளைகளும் தப்ப, தாயும் சில பிள்ளைகளும் மரணமடைந்துள்ளனர். ஒழுங்கான ஆய்வுகள் எவையும் மேற்கொள்ளப்படாததால் உண்மையான விபரங்கள் எவையும் இதுவரை கண்டறியப்படவில்லை.

காணாமல் போனவர்களின் உறவினர்கள் நடத்தி வரும் போராட்டம் முடிவின்றி பல மாதங்களைக் கடந்துள்ள நிலையில் அந்தப் போராட்டங்களை நடத்தும் மக்கள் விரக்தியின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்தச் சூழலைப் பயன்படுத்தி அவர்களிடம் சில தீய சக்திகள் ஊடுருவ ஆரம்பித்துள்ளதை வவுனியாவில் அண்மையில் நிகழ்ந்துள்ள சம்பவம் ஒன்று எடுத்துக் காட்டியுள்ளது. அந்தச் சம்பவத்தில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் வவுனியாவில் உள்ள கோயில் ஒன்றின் முன்னால் அமெரிக்க தேசியக் கொடியையும், ஐரோப்பிய யூனியனின் கொடியையும் பிடித்த வண்ணம், “அமெரிக்காவும்

**தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க...**

# “முஸ்லிம்களுக்கு மஹிந்த, நன்மை செய்தார் - ரணில் ஒன்றும் செய்யவில்லை”

வரலாற்றை பார்க்கும் போது மஹிந்தவுக்கு முஸ்லிம்கள் 90 வீதம் ஒரு தேர்தலிலும் வாக்களித்ததில்லை. அதனால் தனக்கு வாக்களித்த பெரும்பான்மையை திருப்திப்படுத்த மஹிந்த தரப்பு இனவாதத்தை பலவந்தமாக அடக்க முயலவில்லை என்பது உண்மையாகும்.

ஆனால் ரணில் தலைமையிலான ஆட்சிக்கு 98 வீதம் முஸ்லிம்கள் வாக்களித்தும் அவரும் சிங்கள பெரும்பான்மையை அனுசரித்து இனவாதத்தை கட்டுப்படுத்தவில்லை.

இருவர் ஆட்சியிலும் முஸ்லிம் சமூகம் அடிவாங்கி குனூத் ஓதியதுதான் மிச்சம்.

எதிரி நமக்கு அடித்தால் அதை ஓரளவு தாங்கலாம். நாம் 98வீதம் ஆதரித்த நம் நண்பன் நம்மை அடித்தால் அவன் ஒரு துரோகி என்பதைக்கூட நாம் விளங்காவிட்டால் நம்மை விட முட்டாள் இருக்க முடியாது.

நாம் மஹிந்தவுக்கு முட்டுக்கொடுப்பதாக சிலர் கூறுகின்றனர். நாம் முட்டுக்கொடுக்க எம்மிடம் மக்கள் அதிகாரம் என்ற முட்டு உள்ளதா? அதிகார பலம் இல்லாத நாம் யாருக்கும் முட்டுக்கொடுக்க முடியாது என்ற சாதாரண அரசியல் கூட சமூகத்துக்கு தெரியவில்லை.

யார் நல்லது செய்தாலும் அதனை ஆதரிப்பது, யார் கெடுதி செய்தாலும் அதனை எதிர்ப்பது என்ற கொள்கையில் உறுதி கொண்டவர்கள் நாம்.

மஹிந்த ஆட்சியின் போது முஸ்லிம் சமூகம் இன்னல்களுக்கு முகம் கொடுத்த போது, நாம் மட்டுமே துணிந்து எதிர்த்தோம். முஸ்லிம் அமைச்சர்கள் அமைச்சர்களாக இருந்த நிலையில், நாம் அரச ஆதரவை விலக்கி தனித்து நின்று எதிர்த்தோம்.

ஒரு முஸ்லிம் எப்போதும் நல்லதையும் கெட்டதையும் ஆராய்ந்து பார்க்க கடமைப்பட்டுள்ளோம். கண்ணை மூடிக்கொண்டு மார்க்கத்தை பின்பற்றவும் அனுமதியில்லாத போது அரசியலில் கண்ணை மூடிக்கொண்டு எவரையும் ஆதரிக்கவோ எதிர்க்கவோ முற்படக்கூடாது.

இந்த நாட்டின் வரலாற்றில் அனைத்து பேரின கட்சிகளும் இனவாத சிந்தனை கொண்டதுதான். ஆனால் மஹிந்தவினால் முஸ்லிம் சமூகம் பெற்ற அளவு ரணிலால் பெறவில்லை என்கிறோம். குறிப்பாக வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் மஹிந்தவுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளார்கள் என்கிறோம்.

யுத்தம் நிறைவு பெற்று சிலமாதங்களில் வந்த ஜனாதிபதி தேர்தலில், கிழக்கில் உள்ள முஸ்லிம் தொகுதிகள் அனைத்திலும் மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்ட போதும் அவர் கிழக்கு மக்களை பழி வாங்கவில்லை. நிறைய அபிவிருத்திகளை தந்தார்.

ஆனால் ரணில் தலைமையிலான கட்சிக்கு 98 வீதம் முஸ்லிம்கள் கண்ணை மூடிக்கொண்டு வாக்களித்தும், அம்பாறை பள்ளி தாக்கப்பட்ட போது அம்பாறைக்கு வந்தும் சேதமுற்ற பள்ளியை கூட பார்க்காதவர் என்பதால்த்தான் நாம் குற்றம் சொல்கிறோம்.

இவ்வாறெல்லாம் நாம் சொல்வதன் மூலம் இன்னொரு வழியில் நாம் முஸ்லிம் சமூகத்துக்கு மிகப்பெரும் நன்மை செய்கிறோம்.

அதாவது ரணில் மூலம் முஸ்லிம் சமூகத்துக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை என உலமா கட்சித்தலைவர் பகிரங்க குற்றம் சொல்வதால், இதனை நீங்கள் மாற்றி உலமா கட்சியும் புகழும் அளவு முஸ்லிம் சமூகத்துக்கு உதவ வேண்டும் என ரணிலுக்கு முட்டுக்கொடுப்போர் அவரிடம் சொல்வதற்கு நாம் வழி சமைத்துள்ளோம். அவ்வாறு அவர்கள் சொல்வதற்கு ஏன் பயப்படுகிறார்கள் என தெரியவில்லை.

அரசியல் ரீதியில் தலைவர்கள் விடும் பிழைகளை ஏனைய கட்சிகள் விமர்சித்தால்த்தான் தலைவர்கள் தம்மை திருத்தி நல்லது செய்ய முன் வருவார்கள்.

இவ்வாறு நாம் சமூக நன்மைக்காக மஹிந்த நிறைய முஸ்லிம்களுக்கு நன்மை செய்தார், ரணில் ஒன்றும் செய்யவில்லை என நாம் விமர்சிக்கும் இப்படியான சந்தர்ப்பங்களில், பொது மக்கள் எம் மீது தம் ஆத்திரத்தை கொட்டாமல், ரணில் தரப்பிடம் சொல்லி நல்லது செய்வதன் மூலம் எமக்கு பதில் தர சொல்லுங்கள். இதோ நாம் இன்ன இன்ன விசேச நன்மைகளை முஸ்லிம்களின் 98 வீத வாக்குகளுக்காக செய்தோம் என சொல்லச் சொல்லுங்கள். அல்லது இனியாவது செய்வோம் என்றாவது சொல்ல சொல்லுங்கள். இதுதான் சமூகத்தை நேசிக்கும் ஒவ்வொருவரினதும் நல்ல செயலாகும்.

**–முபாறக் அப்துல் மஜீத்**
**உலமா கட்சி**

**நன்றி, இணையத்தளம்:**
**jaffnamuslim.com**

---

**5ம் பக்கத்தொடர்ச்சி....**

ஐரோப்பிய யுனியனும் வந்து எமது உறவுகளைக் கண்டு பிடித்துத் தாருங்கள்” என வேண்டுவதாக ஊடகங்களில் செய்திகள் வந்துள்ளன. இது ஒரு பாரதுரமான நிலைமை.

இந்த மக்கள் இலங்கை அரசாங்கத்தின் மீதும், தமிழ் அரசியல் கட்சிகள் மீதும் நம்பிக்கை இழந்ததின் விளைவே அவர்கள் அந்நிய சக்திகளுக்கு அழைப்பு விடுவதின் அர்த்தமாகும். அவர்கள் பக்கத்திலுள்ள இந்தியாவுக்குக் கூட அழைப்பு விடவில்லை. எங்கோ உள்ள அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் அழைப்பு விடுகின்றனர். அவர்கள் அழைப்பு விடுக்கும் இந்த நாடுகள் கடந்த காலங்களில் உலகம் முழுவதும் பல காலனி நாடுகளை வைத்திருந்து பலவிதமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள். பல இலட்சம் உயிர்களைக் கொன்று குவித்தவர்கள். பல இலட்சம் மக்களை காணாமல் ஆக்கியவர்கள். இப்படியான சக்திகளுக்கு தமது பிரச்சினையைத் தீர்க்க வரும்படி நமது மக்கள் அழைப்பு விடுப்பதென்பது மிகவும் ஆபத்தான நிலைமையாகும்.

இந்த அழைப்பு நிச்சயமாக சாமானிய மக்களால் திட்டமிட்டு விடுக்கப்பட்ட ஒன்று அல்ல. இதன் பின்னணியில் சில நாசகார சக்திகள் இருந்து செயல்பட்டுள்ளன. எனவே இத்தகைய நிலைமைகளை வளரவிடாது இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டிய பொறுப்பு அரசுக்குரியதாகும்.

---

“அவர் ஒரு கழுகாக இருந்தார், இருக்கிறார். மொத்த உலகிலிருக்கும் கம்யூனிஸ்ட்களின் நினைவில் அவர் நேசத்திற்குரியவராக இருப்பார் என்பதுடன் அவருடைய வாழ்க்கை வரலாறும், அவருடைய நூல்களின் முழுமையான பதிப்பும் கம்யூனிஸ்ட்களின் பல தலைமுறைகளுக்கான கல்வியில் மிகப் பயன்மிக்க பாடமாக விளங்கும்”

**— ரோசா லக்சம்பேர்க் குறித்து லெனின்**

# சிவப்பு ரோசா



**ரோசா லக்ஸம்பர்க்**

மிகச் சரியாக நூறு ஆண்டுகள் ஆகின்றன. 1919 ஜனவரி 15. ஜெர்மனி தலைநகர் பெர்லினில் மெல்ல மெல்ல எதேச்சதிகாரத்தையும் பாசிசப் போக்கையும் கைக் கொள்ளத் துவங்கிய - தீவிர கம்யூனிஸ்ட் எதிர்ப்பு சமூக ஜனநாயக கட்சி அரசாங்கத்தின் துப்பாக்கிப் படைப்பிரிவின் கமாண்டர் கேப்டன் வால்டுமார் பாப்ஸ்ட் என்பவனின் அலுவலகம். கைகளை பின்னால் வைத்து சங்கிலியால் பூட்டப்பட்டு முழங்காலில் நிற்க வைக்கப்பட்டிருந்த அந்தப் பெண்மணியின் பின்னந்தலையில் துப்பாக்கியை திருப்பிப் பிடித்து ஓங்கி அடித்தான் ஓட்டோ ரூங்கே என்ற காவலன். “சுட்டுத்தள்ளு” என உத்தரவிட்டான் கேப்டன் பாப்ஸ்ட். கண்மூடித்தனமாக சுட்டான் லெஃப்டினன்ட் கர்ட் ஒகெல். இரத்தம் கொப்பளிக்க சரிந்து விழுந்தார் அந்தப் பெண்மணி. அதேவேளையில், அந்தப் பெண்மணியின் தோளோடு தோள் நின்ற மகத்தான தோழனும் அதேமுறையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். அந்த பெண்மணியின் பெயர், ரோசா லக்ஸம்பர்க். அந்தத் தோழரின் பெயர், கார்ல் லீஃப்னெஹ்ட். 100 ஆண்டுகள் கழித்து இன்றும் ஜெர்மனியின் வீதிகளில், போலந்தின் வீதிகளில், இந்த இருவரது புகைப்படங்களையும் ஏந்தி, ஆயிரம் ஆயிரமாய் தொழிலாளர்கள் அணிவகுக்கிறார்கள். 100 ஆண்டுகளாக, ஒருமுறை கூட விடாமல், இருவரின் நினைவையும் நெஞ்சில் ஏந்தி உணர்ச்சிமிகு முழக்கமிடுகிறார்கள். இவ்வருடம் ஜனவரி15ந் திகதி அந்த இரு புரட்சியாளர்களின் நூற்றாண்டு நினைவு நாள். ரோசா லக்ஸம்பர்க் 1871 மார்ச் மாதம் 5ந் திகதி அன்று போலந்தில் பிறந்தார். அன்றைக்கு போலந்து ரஷ்யப் பேரரசின் கட்டுப்பாட்டில் இருந்தது. பள்ளிப் படிப்பு முதலே புரட்சிகர சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட ரோசா, 1886ல் உருவாக்கப்பட்ட போலந்து இடதுசாரிக் கட்சியான புரட்சிக் கட்சியில் இணைந்தார். முதல்முறையாக ஒரு பொது வேலைநிறுத்தத்திற்காக தொழிலாளர்களை அணிதிரட்டும் பணியில் ஈடுபட்ட போது களத்தில் கற்றுக் கொள்ளத் துவங்கினார்.

அப்போது துவங்கிய ரோசாவின் பயணம், பெர்லினில் மேலே கூறிய ராணுவ கமாண்டரின் அலுவலகத்தில் சுட்டுக் கொல்லப்பட்டு அருகில் உள்ள லாந்த்வெர் ஏரியின் கால்வாயில் தூக்கியெறியப்படும் அந்த நிமிடம் வரை புரட்சி, புரட்சி, புரட்சி என்பதாக மட்டுமே இருந்தது. எனவே தான் அவருக்கு சக தோழர்கள் ‘‘சிவப்பு ரோசா’’ என்றே பெயரிட்டனர். மூலதனத்திற்கெதிராக, முதலாளித்துவத்திற்கெதிராக, ஜெர்மனியில் துளிர்விட்ட பாசிச சிந்தனைக்கெதிராக ஈவிரக்கமற்ற போராட்டத்தை - சிறு துளி அளவு கூட சமரசம் இல்லாத போராட்டத்தை நடத்தியவர் ரோசா. போலந்தில் பிறந்தாலும் அவர் அதிக காலம் வசித்தது ஜெர்மனியில்தான். 1898ல் ஜெர்மனிக்கு இடம் பெயர்ந்த அவர், அங்கு சமூக ஜனநாயக கட்சியின் இடதுசாரி பிரிவு தோழர்களுடன் இணைந்து பணியாற்றினார்.

**எஸ்.பி.ராஜேந்திரன்**

தேசியவாதம் என்று கூறி உழைப்பாளி மக்களை அடிமையாக்கும் சிந்தனைக்கு ஆதரவளிக்கும் சமூக ஜனநாயக கட்சித் தலைமையின் திருத்தல்வாதத்தை எதிர்த்து தோழர்களை அவர் அணிதிரட்டினார். வரலாற்றுப் போக்கில், முதலாளித்துவ சக்திகளிடையே அதிகாரத்தைக் கைப்பற்றும் - மூலதன குவிப்பை தீவிரப்படுத்தும் போர் துவங்குவதற்கான சூழல் ஏற்பட்டது. முதலாம் உலகப் போராக வடிவம் பெற்ற அந்தப் போர் துவங்குவதற்கு முன்பே, தடுத்து நிறுத்துவதற்கும், போர் வந்தால் முதலில் பலியாவது தொழிலாளி வர்க்க நலனே என்பதை மக்களுக்கு உணர்த்துவதற்கும் அவர் தீவிரமாக செயல்பட்டார். இந்த நோக்கத்திற்காக பிரம்மாண்டமான போர் எதிர்ப்பு



**கார்ல் லீஃப்னெஹ்ட**

போராட்டங்களை அணிதிரட்டினார். பிராங்க்பர்ட் நகரில் நடந்த ஒரு கூட்டத்தில், போர் என்ற பெயரில் நமது கைகளில் ஆயுதங்களைத் தருவதற்கு ஆட்சியாளர்கள் முயற்சிக்கிறார்கள். நாம் அதை செய்யக்கூடாது. கையில் ஆயுதமேந்தி, முதலாளித்துவ நலனுக்காக நமது சக பிரெஞ்சு சகோதரர்களை, இதர நாடுகளின் சகோதரர்களை கொன்று குவிக்க செல்லக்கூடாது. சட்டம் - ஒழுங்கு என்பதை மீறி அரசுக்கு பணிய மறுப்போம் என்று முழங்கினார். இதற்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இத்தகைய பரபரப்புமிக்க எழுச்சியின் போராட்டங்களே ரோசாவின் வாழ்க்கை முழுவதும் நிரம்பியிருந்தது. முதலாளித்துவ சக்திகள் மூலதனத் திரட்டலுக்கான போரை 1914ல் துவக்கிவிட்டனர். போருக்கு சமூக ஜனநாயகக் கட்சியும் ஆதரவு அளித்தது. அதை எதிர்த்து ரோசாவும் சக தோழர்களும் வெளியேறினர். 1916 ஜனவரியில் ரோசா லக்ஸம்பர்க், கார்ல் லீப்னெஹ்ட், கிளாரா ஜெட்கின், பிரான்ஸ் மெஹ்ரிங் ஆகிய தோழர்கள் இணைந்து ஸ்பார்ட்டகஸ் லீக் என்ற புதிய அமைப்பை உருவாக்கினர். ரோமானிய பேரரசில் அடிமைகளை விடுவிக்க வந்த மாபெரும் போராளியின் பெயர் ஸ்பார்ட்டகஸ். அந்த பெயரை பெருமிதத்தோடு தங்களது குழுவிற்கு வைத்தார் ரோசா. போரை எதிர்த்து ஜெர்மனி தொழிலாளர் வர்க்கத்திடம் பிரச்சாரம் செய்தார்கள். பொது வேலைநிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தார்கள். இதற்காக சிறையில் அடைக்கப்பட்டார்கள். சிறைவாசத்திற்கு

பிறகு 1918 நவம்பர் 8 அன்று ரோசாவும் மறுநாள் கார்ல் லீப் னெஹ்ட்டும் விடுதலை செய்யப்பட்டனர். அதன்பின்னரும் அவர்கள் ஓயவில்லை. ஸ்பார்ட்டகஸ் லீக்கை விரிவாக்கினர். செங்கொடி (ரெட் பிளாக்) எனும் பத்திரிகையை உருவாக்கினர். பிரச்சாரத்தை முன்னெடுத்துச் சென்றனர். ஜெர்மனியில் செயல்படும் சுயேட்சையான சோசலிஸ்ட்டுகள் மற்றும் சர்வதேச கம்யூனிஸ்ட்டுகளை இணைத்து 1919 ஜனவரி 1 அன்று ஜெர்மனி கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கினர். பொதுச் செயலாளராக தங்களது சக தோழர் கார்ல் லீப்னெஹ்ட்டை தேர்ந்தெடுத்தனர். இந்த இடத்தில் கவனிக்க வேண்டிய ஒன்று, தோழர் ரோசா, ரஷ்ய போல்ஷ்விக் கட்சியின் தலைவர் தோழர் லெனினுடன் தொடர்ந்து முரண்பட்டார்.

மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்களே புரட்சிகரமானவை என்றும் அத்தகைய போராட்டங்களை தூண்டினால் புரட்சி வெடிக்கும் என்றும் ரோசா உறுதியாக நம்பினார். இடைவிடாமல் அதைக்கூறி வந்தார். ஆனால் லெனின் அதை மறுத்தார். தன்னெழுச்சியான போராட்டங்களை ஒரு வடிவத்திற்கு கொண்டுவரவும், தொழிலாளி வர்க்கத்தை அரசியல்படுத்தி, வர்க்க உணர்வூட்டி, புரட்சியை நோக்கிச் செல்வதற்கான இலக்கை நிர்ணயித்து மிகச் சரியாக வழிநடத்திச் செல்வதற்கு ஸ்தாபன வடிவம் அவசியம் என்று லெனின் உறுதியாக வாதிட்டார். கட்சி ஸ்தாபனம் என்ற ஒன்றின் மீது கடைசி வரை நம்பிக்கை கொண்டிருக்காத ரோசா, அரசியல் வளர்ச்சிப் போக்கில் ஸ்பார்ட்டகஸ் குழுவை ஜெர்மனி கம்யூனிஸ்ட் கட்சி என்ற ஸ்தாபன வடிவத்திற்குள் கொண்டு வரவேண்டிய நிலை ஏற்பட்டதை வேறு வழியின்றி ஏற்றார். எனினும் தொழிலாளி வர்க்கத்திற்கு அரசியல் உணர்வூட்டி, அணிதிரட்டி எழுச்சிகொள்ளச் செய்ய வேண்டும் என்ற பாதையில் அந்தக்குழு பயணிக்கவில்லை. 1919 ஜனவரியில் போருக்கு எதிராக மீண்டும் பெரும் போராட்டத்திற்கு அறைகூவல் விடுத்தார்கள். இதன் ஒரு பகுதியாக பெர்லினில் பேரணி ஒன்றை நடத்தியபோது, அதிகாரத்தை கைப்பற்றுவோம் என்று ரோசா முழக்கமிட்டார். தொடர்ச்சியான இத்தகைய போராட்டங்களின் பின்னணியில் சமூக ஜனநாயக கட்சியின் ஆட்சியாளர்கள் ஜெர்மனி கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் கார்ல் லீப்னெஹ்ட்டையும் ரோசா லக்ஸம்பர்க்கையும் கைது செய்ய உத்தரவிட்டனர்.

உடனடியாக, 1919 ஜனவரி 15 அன்று இருவரையும் கைது செய்த ஜெர்மனி ராணுவத்தின் துப்பாக்கிப் படைப்பிரிவு, கேப்டன் பாப்ஸ்டின் அலுவலகத்தில் கொண்டு வந்து நிறுத்தியது. எந்த விசாரணையுமின்றி இருவரையும் உடனடியாக சுட்டுக் கொல்லுமாறு ஆணையிட்டான் கேப்டன் பாப்ஸ்ட். அடுத்த நிமிடமே அந்த இரண்டு மகத்தான போராளிகளும் படுகொலை செய்யப்பட்டனர். ஜெர்மனியில் - ஐரோப்பாவில் முதலாளித்துவ சுரண்டலுக்கெதிராக, தலைதூக்கிய எதேச்சதிகாரத்திற்கெதிராக, துளிர்விட துவங்கிய பாசிசத்திற்கெதிராக, இவையனைத்தின் இயக்கு சக்தியாக இருக்கும் போருக்கு எதிராக ஒரு நிமிடம் கூட ஓயாமல் உரத்துக் குரல் எழுப்பிய மாபெரும் புரட்சியாளர் ரோசா. மாமேதை லெனின், ரோசாவின் மரணத்தை அறிந்து துயரம் அடைந்தார். அவரது வார்த்தைகளே ரோசாவின் மரணத்திற்கு புரட்சிகரமான அஞ்சலியாக அமைந்தது. லெனினின் அந்த வார்த்தைகள் இவைதான்: “தென்றல் காற்றில் சிட்டுக் குருவிதான் பறக்கும். புயல் காற்றில் பருந்துகள்தான் பறக்கும். ரோசா ஒரு பருந்து’’

நன்றி: தீக்கதிர்

# வைக்கல் பட்டடை நாய்கள்!

அண்மையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பெய்த கன மழையால் அந்த மாவட்டங்களில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாயினர். அதிலும் இந்த இரு மாவட்டங்களினதும் மக்கள் போரினால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் அவர்கள் பட்ட அவலங்களும், அடைந்த இழப்புகளும் அளவிட முடியாதவை.

இந்த மக்களின் அவல நிலையின் போது சக தமிழ் மக்கள் மட்டுமின்றி, தென்னிலங்கையில் வாழுகின்ற சிங்கள மக்களும், முஸ்லீம் மக்களும், மலையக மக்களும் மனித நேயம் மிக்கவர்களாகச் செயற்பட்டது மனிதம் எவ்வளவு ஆழமானது என்பதையும் அது மரணித்துவிடவில்லை என்பதையும் எடுத்துக் காட்டியது.

அதுமட்டுமின்றி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், ரணில் தலைமையிலான அரசாங்கமும், போதிய அக்கறை எடுத்து இந்த மக்களுக்கு உதவ முன்வந்தனர். ஒரு பிரதி அமைச்சர் கிளிநொச்சிக்கு வந்து தானே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிணற்றுக்குள் இறங்கி துப்பரவுப் பணி செய்துள்ளார்.

இந்த மக்களுக்கு உதவியதில் குறிப்பிட்டுப் பாராட்டப்பட வேண்டியவர்கள் இராணுவத்தினர்தான். அவர்கள் துரிதகதியில் செயல்பட்டு வெள்ளத்தில் சிக்கிய முதியவர்களையும், சிறுவர்களையும், பெண்களையும் மீட்பதில் பாரிய சேவை புரிந்தனர். அதனால்தானோ என்னவோ கிளிநொச்சிப் பகுதிகளில் இராணுவத்தின் சேவையைப் பாராட்டி சில சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன.

ஆனால் இந்த மக்களுக்கு நேரடியாக உதவுவதில் பின் நின்றவர்கள் இந்த மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றக் கதிரைகளுக்குச் சூடேற்றிக் கொண்டிருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர்தான். பிரதமர் ரணிலே கிளிநொச்சிக்கு விஜயம் செய்து வெள்ள நிவாரண வேலைகள் பற்றி ஆராய்ந்த போது கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனோ பெரும்பாலான கூட்டமைப்பு எம்.பிக்களோ அந்தப் பக்கம் தலையும் காட்டவில்லை. பிரதமர் கூட்டிய ஆலோசனைக் கூட்டத்தில் கூட ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கும் பத்தாயிரம் ரூபா போதாதென்றும், குறைந்தபட்சம் இருபத்தையாயிரம் ரூபாவாவது வழங்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

அதே நேரத்தில், இந்த வெள்ளப் பிரச்சினையை வைத்து அரசியல் செய்வதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மட்டுமின்றி, முன்னாள் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் உட்படப் பலரும்

**தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க...**

# தமிழ் தேசியக் கூட்டமைக்குள் அதிகரிக்கும் முட்டி மோதல்கள்!

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் நாளுக்குநாள் உள் முரண்பாடுகள் அதிகரித்த வண்ணம் உள்ளது. இது சம்பந்தமான பிரதிபலிப்புகளை அண்மைக் காலத்தில் மேலும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

கூட்டமைப்புக்குள் முரண்பாடு என்பது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அதற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. ஆனால் முன்னர் அது கூட்டமைப்புக்குள் உள்ள சிலரின் சுயநல நோக்கங்களால் வெளித் தெரியாமல் அமுக்கி வைக்கப்பட்டிருந்தது.


முதலாவதாக, தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட நோக்கமும் விதமுமே பிழையான அடிப்படையைக் கொண்டவை.

புலிகள் கொடிகட்டிப் பறந்த காலத்தில் அவர்கள் எவ்வளவுதான் இராணுவ வெற்றிகளைக் குவித்த போதும், அவர்களால் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற முடியவில்லை. அவர்களை இலங்கை - இந்திய அரசாங்கங்கள் மட்டுமின்றி, பல சர்வதேச நாடுகளும் குறிப்பாக மேற்கு நாடுகள் பயங்கரவாத இயக்கமாக முத்திரை குத்தித் தடை செய்து வைத்திருந்தன.

அதனால் அவர்களுக்கு சர்வதேச அங்கீகாரம் பெறுவதற்கு ஜனநாயக ரீதியாகத் தோற்றமளித்த ஒரு முன்னணி அரசியல் அமைப்புத் தேவையாகவிருந்தது. அந்த நோக்கத்துக்காகவே அகிம்சை பேசி வந்த தமிழரசுக் கட்சியுடன் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட மூன்று ஆயதக் குழுக்களையும் சேர்த்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் அமைப்பொன்றை புலிகள் உருவாக்கினார்கள்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியமைக்கு புலிகளுக்கு இன்னொரு நோக்கமும் இருந்தது. தமக்கென ஒரு அமைப்பு இல்லாவிட்டால், நடைபெறும் தேர்தல்களில் ஈ.பி.டி.பியும், சில தென்னிலங்கைக் கட்சிகளும் வடக்கு கிழக்கில் போட்டியிட்டு வெற்றிபெறக்கூடிய சூழலும் இருந்தது. எனவே அதைத் தடுப்பதானாலும் அவர்களுக்கு ஒரு போலி ஜனநாயக அமைப்பு தேவையாகவிருந்தது.

ஆனால் புலிகள் என்னதான் தம்மை ஜனநாயகவாதிகளாகக் காட்டிக்கொள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியிருந்தாலும் 2004ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மற்றையவர்களைப் போட்டியிட



முடியாதபடி வன்முறையைப் பாவித்துத் தடுத்ததின் மூலமும், கள்ள வாக்குகளை பெருமளவில் போட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களை வெற்றி பெற வைத்ததின் மூலமும், அவர்களது போலி ஜனநாயகம் அம்பலத்துக்கு வந்தது.

அவர்களது இந்த ஜனநாயக விரோத மோசடியை தேர்தல் கண்காணிப்புக்கு என வந்திருந்த ஐரோப்பிய யூனியன் தேர்தல் கண்காணிப்புக் குழு பட்டவர்த்தனமாகவும் பகிரங்கமாகவும் வெளி உலகிற்கு அம்பலப்படுத்தியது.

**சுப்பராயன்**

புலிகள் தமது தேவையின் பொருட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கியிருந்தாலும், அதற்கென எவ்விதமான சட்ட திட்டங்களையும், ஸ்தாபன அமைப்பு ஒழுங்குமுறைகளையும் அவர்கள் வகுத்து வைக்கவில்லை. அவர்களது ஆணையின் கீழ் நான்கு இயக்கங்களும் சமமாகவே நடத்தப்பட்டன. ஆனால் 2009இல் புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் நிலைமை தலைகீழாக மாறியது. 'பூனை இல்லாத வீட்டில் எலிகளுக்கு கொண்டாட்டம்' என்பது போல, கூட்டமைப்புக்குள் இருந்த நான்கு கட்சிகளும் தாம்தாம் நினைத்தபடி நடக்கத் தலைப்பட்டனர். இருந்தாலும் தமிழரசுக் கட்சியியே இவற்றுள் பெரியண்ணன் போல் நடக்கக்கூடிய தகுதியைப் பெற்றிருந்தது.

தமிழரசுக் கட்சி அவ்வாறு நடந்து கொள்வதற்குக் காரணங்கள் இருந்தன. முதலாவது காரணம், கூட்டமைப்பில் இணைந்திருந்த ஏனைய அமைப்புகளான புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். என்பன ஆயுதப் போராட்டத்துக்கூடாக வளர்ந்து, பின்னர் 1987இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கையைத் தொடர்ந்து நாடாளுமன்ற அரசியலுக்கு வந்தவை. ஆனால் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை அது தோற்றம் பெற்ற காலத்திலிருந்து 'அகிம்சை' பேசி வளர்ந்த கட்சியாகும். (தமிழரசுக் கட்சியும் அதன் தலைமையில் உருவான தமிழர் விடுதலைக் கூட்டணியும்தான் வீர வசனம் பேசி தமிழ் இளைஞர்களை ஆயுதப் போராட்டப் பாதையில் தூண்டிவிட்டவர்கள் என்பது தனியாக ஆராயப்பட வேண்டிய விடயம்)

இரண்டாவது காரணம், தமிழ் தேசியக் கூட்டமைப்பில் நான்கு கட்சிகள் இணைந்திருந்தாலும் அவ்வமைப்பு தனியொரு கட்சியாக தேர்தல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் அது உருவான காலத்திலிருந்து நடைபெற்ற

எல்லாத் தேர்தல்களிலும் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திலேயே போட்டியிட்டு வந்திருக்கிறது. அதுவும் தமிழரசுக் கட்சி மற்றைய கட்சிகள் மீது சட்டாம்பிள்ளைத்தனம் செய்வதற்கு ஏதுவாக அமைந்துவிட்டது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பை தனியொரு கட்சியாக தேர்தல்கள் திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டும் என ஏனைய பங்காளிக் கட்சிகள் தொடர்ச்சியாகக் கோரி வந்த போதிலும் தமிழரசுத் தலைமை அதை சாதுரியமாகத் தட்டிக் கழித்து வந்தது தனது பிடியைக் கூட்டமைப்பில் வைத்திருப்பதற்காகவே.

தமிழரசுக் கட்சியின் எதேச்சாதிகாரப் போக்கால் ஏனைய கட்சிகள் அதிருப்தி அடைந்திருந்தாலும், சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப். மட்டும் முரண்டு கொண்டு கூட்டமைப்பை விட்டு வெளியேறியுள்ளது. கூட்டமைப்புக்குள் உள்ள கட்சிகளிடையே அமைப்பு ரீதியிலான மோதல்கள் ஒருபுறமிருக்க, அரசியல் ரீதியிலான முரண்பாடுகளும் அண்மைக்காலத்தில் தீவிரமடைந்துள்ளது. குறிப்பாக, 2015இல் 'நல்லாட்சி' பதவிக்கு வருவதற்கு கூட்டமைப்பு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியதுடன், அந்த அரசாங்கத்தை எதிர்க்கட்சிப் பதவியையும் வைத்துக்கொண்டு தொடர்ச்சியாக ஆதரித்தும் வந்துள்ளது. குறிப்பாக தமிழரசுக் கட்சித் தலைமையில் இருக்கும் சம்பந்தன், சுமந்திரன் போன்றோரே அரசை ஆதரிப்பதில் முனைப்பாக இருந்ததால், மற்றைய கட்சிகள் அதிருப்தி அடைந்துள்ளன. அதுமட்டுமின்றி, மக்களும் கூட்டமைப்பின் போக்கை ஏற்கவில்லை என்பதை 2018 பெப்ருவரி 10இல் நடைபெற்ற தேர்தலின் போது கூட்டமைக்கு ஏற்பட்ட வாக்கு வங்கி வீழ்ச்சி எடுத்துக் காட்டியது.

தவிர, கடந்த வருடம் ஒக்ரோபர் 26ஆம் திகதி இலங்கையில் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலையின் போது, சம்பந்தனும், சுமந்திரனும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக வெளிப்படையாகச் செயல்பட்டதுடன், ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்குவதற்காக கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையெழுத்துகளையும் (ஓரளவு பலவந்தமாக) பெற்றும் கொடுத்தனர்.

தமிழரசுக் கட்சித் தலைமையின் இத்தகைய போக்குகளால் அக்கட்சிக்கும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கும் இடையில் மோதல் அதிகரித்துள்ளது மட்டுமின்றி, தமிழரசுக் கட்சிக்குள்ளும் முரண்பாடுகள் அதிகரித்துள்ளன. அண்மையில் நிகழ்ந்த சம்பவங்கள் இதற்குச் சான்று.

எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த ராஜபக்சவை நியமித்த பின்னர், சம்பந்தனும் சுமந்திரனும் தாம்தான் எதிர்க்கட்சியினர் என தொடர்ச்சியாக விதண்டாவாதம் புரிந்து வந்தனர். இந்த நிலைமையில் தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வ தலைவரான மாவை சேனாதிராசா, எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு சண்டையிடாது என்றும், நீதிமன்றம் செல்லாது என்றும் பகிரங்கமாக அறிவித்தார். மாவையின் இந்த அறிவிப்பு சம்பந்தனுக்கும் சுமந்திரனுக்கும் கொடுத்த அடியாகவே கருதப்படுகிறது.

அதேபோல, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான புளொட்டின் தலைவர் சித்தார்த்தன், நாடாளுமன்ற நெறிமுறைகளின்படி எதிர்க்கட்சித் தலைவர் பதவி அதிக ஆசனங்களைக் கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த மகிந்தவுக்கே உரியது என, தமிழரசுத் தலைமைக்கு இன்னொரு அடியைக் கொடுத்துள்ளார்.

அதே நேரத்தில், கூட்டமைப்பின் இன்னொரு பங்காளிக் கட்சியான ரெலோ இந்த விவகாரத்தில் கருத்து எதனையும் கூறாது மௌனமாக இருப்பதின் மூலம் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாக இல்லை என்பது தெளிவாகிறது.

இது ஒரு புறமிருக்க, சுமந்திரன் புலிகளுக்கு எதிராகத் தொடங்கியுள்ள பிரச்சாரமும் தமிழரசுக் கட்சி அணிகளிடையே குழப்பத்தை உருவாக்கிவிட்டுள்ளது. குறிப்பாக புலிகளின் தீவிர ஆதரவாளரான நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கொதித்துப் போயிருக்கிறார்.

மற்றொரு பக்கத்தில், புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தடையாக இருந்தனர் என சுமந்திரன் ஒரு குற்றச்சாட்டுக் குண்டைத் தூக்கி எறிய, சுமந்திரனின் கூற்று தவறு, புலிகள் சமாதானத் தீர்வுக்கு ஆதரவாகவே செயல்பட்டனர் என தமிழரசுக் கட்சியின் நீண்டகால உறுப்பினரான சி.வி.கே.சிவஞானம் ஊடக மாநாடு கூட்டித் தெரிவித்து, சுமந்திரன் மீது பதில் குண்டொன்றை வீசியிருக்கிறார். இது போன்ற எதிரும் புதிருமான அறிக்கைப் போர்களை எதிர்காலத்தில், குறிப்பாக தேர்தல் நெருங்கும் வேளையில் காணக்கூடியதாக இருக்கும்.

எப்படிப் பார்த்தாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு, குறிப்பாக தமிழரசுக் கட்சிக்கு 'சனியன்' பிடித்துள்ளது என்பதையும், அதனால் அதன் எதிர்காலம் மங்குதசையில் உள்ளது என்பதும் தெளிவாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. அந்த நிலைமையைச் சிருஸ்டித்த பெருமை சம்பந்தன், சுமந்திரன் இருவருக்குமே உரியது.

**8ம் பக்கத்தொடர்ச்சி....**

போட்டி போட்டனர். காமாலைக் கண் உள்ளவர்களுக்கு பார்ப்பதெல்லாம் தவறாகத் தெரியும் என்பது போல, இராணுவம் மேற்கொண்ட நிவாரண நடவடிக்கைகளுக்கு உள் நோக்கம் கற்பிக்க இவர்கள் முயன்றனர்.

இராணுவம் தொடர்ந்தும் இந்தப் பகுதிகளில் நிலை கொண்டிருப்பதற்காக இவ்வாறான செயல்களைச் செய்வதாகச் சிலர் கதை பரப்பினர். இன்னும் சிலர் ஜெனிவாவில் எழுந்த போர்க் குற்றச்சாட்டுகளை மறைப்பதற்காகவே இராணுவம் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது எனச் சொல்லித் திரிந்தனர்.

இத்தகையவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தாமும் எவ்வித உதவியும் செய்யமாட்டார்கள். மற்றவர்கள் ஏதாவது செய்தாலும் ஏதாவது குறை சொல்லிக் கொண்டிருப்பார்கள். இந்த 'வைக்கல் பட்டடை நாய்கள்' காலம் காலமாகத் தமிழ் சமூகத்தில் கோலோச்சிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

***-கிருபா***

சமூகவுடைமைக்கான போராட்டமே உலக வரலாறு கண்ட மாபெரும் உள்நாட்டுப் போர். தொழிலாளர்கள் தங்களைப் பாதுகாக்க ஆயுதம் ஏந்தவேண்டும். போராடாமல் சமூகவுடைமையை ஈட்ட முடியாது. வன்முறை ஓங்குதல் திண்ணம், குருதி சிந்துதல் திண்ணம், எனினும் ஒரு துளி குருதியும் வீணாகச் சிந்தக்கூடாது. முழு உலகத்தையும் கவிழ்க்க வேண்டும். ஆனால் தவிர்க்கப்படக்கூடிய கண்ணீர் ஒரு குற்றச்சாட்டுக்கு நிகரானது. ஒரு முக்கிய செயலைப் புரிய விரையும் ஒருவர், நினையாப் பிரகாரமாகவேனும் ஒரு புழுவை மிதிப்பது குற்றமாகும்.


**–ரோசா லக்சம்பேர்க்**

# புதிய அரசியலமைப்புக்கு எதிர்ப்பு மகிந்தஅணியில் மட்டுமல்ல, ஐதேகவிற்கு உள்ளேயும் வலுக்கிறது - அமைச்சர் மனோ கணேசன்

'புதிய அரசியலமைப்பு அமைக்கும் பணியை தொடங்கிய ஆரம்பத்தில், வழிநடத்தல் குழு, ஜனாதிபதி முறை ஒழிப்பு, தேர்தல் முறை மாற்றம், அரசியல் தீர்வு ஆகிய மூன்று பிரதான இலக்குகளை தீர்மானித்தது. காலப்போக்கில் முதலிரண்டை மட்டும் தீவிரமாக செய்ய முயன்று, அரசியல் தீர்வை தள்ளி வைக்க முயன்றார்கள்.

ஜேவிபியை திருப்தி படுத்த முதலாவது இலக்கான நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிப்பு என்பதை நோக்கி வழிநடத்தல் குழு வேகமாக நகர்ந்தது. பிறகு எல்லா பெரும்பான்மை கட்சிகளும் சேர்ந்து தேர்தல் முறையை மாற்றி தொகுதி முறைமையை கொண்டு வந்து, தென்னிலங்கையில் பரந்து வாழும் சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவத்தை தீர்த்து கட்டுவது என கங்கணம் கட்டிக்கொண்டு வழிநடத்தல் குழுவில் செயற்பட்டார்கள். இதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பும் ஒரு கட்டத்தில் பெரும்பான்மை கட்சிகளுடன் உடன்பட்டது. பின்னர் ஏனைய சிறுபான்மை கட்சிகளான தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் வலியுறுத்தல் காரணமாக, தமிழ் தேசிய கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டை தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் மாற்றிக்கொண்டது.

தகிடுதத்தம் செய்து உள்ளூராட்சி தேர்தல்களில் புதிய தேர்தல் முறையை கொண்டு வந்தார்கள். இதை பெரும்பான்மை கட்சிகள் எம்மீது




நிர்பந்தம் செலுத்தி அரசியலமைப்பு பணிக்கு வெளியில் செய்தார்கள். பின்னர் இதை அப்படியே மாகாணசபை தேர்தல் முறைக்கும் கொண்டுவந்து, வழிநடத்தல் குழுவுக்குள் பாராளுமன்ற தேர்தல் வரைக்கும் கொண்டு வந்து சிறுபான்மை மக்களை முழுதாக முடிக்க முயன்றார்கள்.

மாகாணசபை தேர்தல் சட்டம் கொண்டு வந்த போது அதற்கு பெரும் நிபந்தனைகள் விதித்து நாம் இந்த முயற்சியை தடுத்து நிறுத்தினோம். வழிநடத்தல் குழுவுக்குள், பாராளுமன்ற தேர்தலுக்கு, புதிய தேர்தல் முறை மாற்றத்தை கொண்டு வருவதையும் நாம் கடுமையாக எதிர்த்தோம். இன்று முழு நாடும் பழைய தேர்தல் முறையை ஏற்றுக்கொண்டுள்ளது. இது எமது வெற்றி. இந்த இனவாத முயற்சியை தடுத்து நிறுத்திய பெருமை தமுகூ, முகா, அஇமகா ஆகிய மூன்று சிறுபான்மை கட்சிகளுக்கு மட்டுமே உண்டு.

இப்போது புதிய அரசியலமைப்பு வரும் சாத்தியம் அருகி விட்டது. இதை ஊகித்தே பல வருடங்களுக்கு முன்னமேயே, புது அரசியலமைப்பு "இது வரும் ஆனால் வராது. நேரத்தை வீணடிக்காமல் வேறு வழிமுறைமையை நாட வேண்டும்" என்று அடித்து கூறினேன். உண்மையை கூறினேன். வேறு வழிமுறைமை என்றால், வழிநடத்தல் குழு என்ற பேச்சு பெட்டியை விடுத்து, அனைத்து தமிழ் கட்சி எம்பீக்களின் ஒன்றியம் அமைப்போம் என்ற யோசனையையும் முன் வைத்தேன். சிங்கள கட்சிகள், அரசியல் கட்சி வேறுபாடுகளை மறந்து விட்டு அரசியல் தீர்வு முயற்சியை ஆதரிக்க வேண்டும் என சொல்லும் தமிழ், முஸ்லிம் தலைமைகள், தமக்குள் அரசியல் கட்சி வேறுபாடுகளை மறந்து விட்டு ஒன்றுசேர முடியாமல் போனது ஏனோ என்ற கேள்வியை இன்று வரலாறு எம்மை பார்த்து கேட்கிறது. இந்த கேள்வியை வரலாறு கேட்பதற்கு முன் நான் அன்றே கேட்டேன். ஐக்கிய தேசிய கட்சிக்கு உள்ளேயும் இந்த எதிர்ப்பு வலுக்கிறது. இதற்கு அவர்கள் காலம் கடந்து விட்டது, இது தேர்தல் ஆண்டு என்ற காரணங்களை காட்டுகிறார்கள். ஒன்றுபட்ட இலங்கைக்குள் எமக்கு உரியதை கேட்டு பெற நாம் ஒருகுரலில் பேச வேண்டும். இதை உணர்ந்து செயற்பட தயாராகும் கட்சிகளுடன் சேர்ந்து செயற்பட தமிழ் முற்போக்கு கூட்டணி தயார்' என்று மனோ கணேசன் கூறியுள்ளார்.

# தற்போதைய அரசாங்கம் வீழ்ச்சி அடையும்!

## இலண்டன் அமைப்பு எதிர்வு கூறுகிறது

**இ**ந்த வருட இறுதியில் தற்போதைய அரசாங்கம் வீழ்ச்சி அடையுமென இங்கிலாந்தைத் தளமாகக் கொண்டு செயல்படும் பொருளாதார புலனாய்வு பிரிவு (ஈ.ஐ.யு) தெரிவித்துள்ளது. அதன் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அடுத்து நடைபெறவுள்ள ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் சிறிலங்கா பொதுஜன முன்னணி வேட்பாளர்களே வெற்றி பெறுவார்கள். தேர்தலைத் தொடர்ந்து அரசாங்கம் தொடர்ந்தும் பலவீனமாக இருக்கும்.

அடுத்த பாராளுமன்றத் தேர்தல் 2020 நடுப்பகுதியில் நடைபெறவிருந்த போதிலும், அந்தத் தேர்தல் 2019 பிற்பகுதியில் நடைபெறுமென எதிர்பார்க்கின்றோம். அது நடைபெறும் போது சிறீலங்கா பொதுஜன பெரமுன அதிக ஆசனங்களுடன் வெற்றி பெற்று அரசாங்கம் அமைக்கும்.

அண்மையில் இடம்பெற்ற அரசியலமைப்புக்கு மாறான நடவடிக்கைகள் சில தொகுதிகளில் கட்சியின் செல்வாக்கைப் பாதிக்கக்கூடும். அதனால் குறிப்பிட்டளவு தாக்கமொன்றைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்க முடியாது. நாங்கள் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் வெற்றியை தொடர்ந்தும் எதிர்வு கூறி வருகின்றோம் என அந்த அமைப்பு அழுத்திக் கூறியுள்ளது.

ஒவ்வொருவரும் முற்றுமுழுதாக, சுதந்திரமாக மேம்படுவதற்கு ஏதுவான ஆட்சிநெறி கொண்ட சமூகத்தை அமைப்பதே சமூகவுடைமையின் நோக்கம்.

-மார்க்ஸ்

# சுமந்திரன் வகுக்கும் புதிய வியுகம் தமிழ் மக்களிடம் எடுபடுமா?




அண்மைக் காலமாக தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், அக்கட்சியினதும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினதும் வருங்காலத் தலைவராக வரக்கூடியவர் எனக் கருதப்படுபவருமான எம்.ஏ.சுமந்திரன் விடுதலைப் புலிகளை பொது மேடைகளில் விமர்சித்து வருகின்றார். புலிகள் கோலோச்சிய காலத்தில் இந்தச் சுமந்திரன் என்பவர் யார், இவர் எங்கு இருந்தார், என்ன செய்து கொண்டிருந்தார் என்பது பொதுமக்களுக்குத் தெரியவே தெரியாது. பொதுமக்களுக்கென்ன, தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் பலருக்குக்கூடத் தெரியாது. அதுமட்டுமல்லாமல், புலிகள் இறுதி யுத்த நேரத்தில் அரச படைகளால் அழிக்கப்பட்டு 10 ஆண்டுகள் கடக்கும் வரையிலும் கூட சுமந்திரன் புலிகள் மீது எந்தவிதமான விமர்சனங்களையும் முன் வைக்கவும் இல்லை.

அப்படியிருக்க, இப்பொழுது மட்டும் சுமந்திரன் புலிகளைத் திடீரென விமர்சிக்க புறப்பட்டிருப்பதன் பின்னணி என்ன என்ற கேள்வி எழுகின்றது. நீண்டகாலமாக புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்து வரும் சிலர் மத்தியில் சுமந்திரனின் இந்த திடீர் நிலைப்பாடு குழப்பங்களையும் ஏற்படுத்தி இருப்பதையும் அவதானிக்க முடிகிறது. கடந்த காலங்களில் சுமந்திரனின் அரசியல் நிலைப்பாடுகளால், அவர் மேற்கத்தைய சார்பானவர், ஐக்கிய தேசியக் கட்சியின் கையாள் என்று கருதியிருந்த சிலர் கூட, சுமந்திரனின் புலி எதிர்ப்பு நிலைப்பாட்டைக் கண்டு ஆச்சரியப்பட்டு, “என்ன இருந்தாலும் உண்மையை வெளிப்படையாகப் பேசும் ஒரேயொரு கூட்டமைப்பு அரசியல்வாதி” எனப் புகழாரமும் சூட்டுகின்றனர்.

ஆனால் சுமந்திரனின் புலிகளுக்கெதிரான இந்த திடீர் நிலைப்பாட்டுக்குக் காரணம் என்ன என்பதை தீர ஆராய்ந்தால்தான் அவரது இந்தப் புதிய நாடகத்துக்கு என்ன காரணம் என்பதை அறிந்துகொள்ள முடியும்.

சுமந்திரன் முதலாளித்துவ தத்துவ நோக்கும், தந்திரங்களும் கொண்ட ஒரு புத்திஜீவி அரசியல்வாதி. இவரைப் போன்ற ஒருவரை சம்பந்தனைத் தவிர்த்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு அணிகளில் காண முடியாது. எனவே தமிழ் மக்கள் மத்தியில் உள்ள அரசியல் மனநிலை என்னவென்பதை ஓரளவு துல்லியமாக அறிந்து வைத்திருக்கிறார் சுமந்திரன்.

அதன் அடிப்படையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வழமையான புலி சார்பு அரசியல் அடிப்படையில் தமது எதிர்காலப் பிரச்சாரங்களைச் செய்யாமல் சற்று வித்தியாசமாக புலி எதிர்ப்பு அரசியலையும் சேர்த்து தமது அரசியல் தந்திரோபாயத்தை வகுப்பதற்கு சுமந்தின் தீர்மானித்துள்ளார் எனத் தெரிய வருகிறது. அப்படி அவர் தீர்மானிப்பதற்கு தமிழர் அரசியலில் கடந்த சில வருடங்களாக ஏற்பட்டு வரும் மாற்றங்களை அவர் கவனத்தில் எடுத்திருக்கிறார்.

***புனிதன்***

முக்கியமாக, புலிகள் இருந்த காலத்திலும் பின்னர் அவர்கள் அழிக்கப்பட்ட பின்னரான சிறிது காலப் பகுதியிலும் அவர்களுக்கான செல்வாக்கு தமிழ் மக்கள் மத்தியில் இருந்தது உண்மையே. அந்தச் செல்வாக்கை தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் வெற்றிக்காகப் பயன்படுத்தியதும் உண்மையே. ஆனால் தற்போதைய சூழலில் புலிகள் மீண்டும் புனர்ஜென்மம் எடுப்பதற்கான சூழல் அறவே இல்லை. தமிழ் மக்கள் மத்தியிலும் அவர்களது செல்வாக்கு நாளுக்குநாள் அருகி வருகின்றது. உள்நாட்டிலும் புலம் பெயர் நாடுகளிலும் புலிகளின் சில அனுதாபிகளும், அவர்களை வைத்து பிழைப்பு நடத்தியவர்களும் இடையிடையே புலிகளின் பெயரை உச்சரிப்பதைத் தவிர வேறு எந்த எழுச்சிச் சூழலும் அவர்களுக்கு இல்லை. எனவே புலிகளின் பெயரைச் சொல்லி வாக்கு வேட்டையாட வேண்டிய தேவை இனியும் இல்லை என சுமந்திரன் கருதுகின்றார்.

அத்துடன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை தம் வசம் வைத்திருக்கும் சம்பந்தன், சுமந்திரன் போன்றோர் முன்னைய காலங்களில் இருந்த தமிழ் தலைமைகளை விட மிகவும் வெளிப்படையாக மேற்குலக சக்திகளுடனும், ஐக்கிய தேசியக் கட்சியுடனும் கைகோர்த்து செயல்பட ஆரம்பித்துவிட்டனர். இந்தச் சூழலில் ஏறத்தாழ 27 உலக நாடுகளால் பயங்கரவாத அமைப்பாக பட்டியலிடப்பட்ட புலிகளின் வாலில் தொடர்ந்தும் தொங்கிக் கொண்டிருப்பது தாம் தேர்ந்தெடுத்த தரகு அரசியலுக்கு சரிப்பட்டு வராது எனவும் சுமந்திரன் கருதுகிறார்.

இதுதவிர, புலிகளை மையப்படுத்தி கடந்த காலத்தில் முனெடுத்து வந்த தீவிர தமிழ் தேசியவாத அரசியலிலும் இப்பொழுது வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

சம்பந்தன், சுமந்திரன் போன்றோர் எடுத்துள்ள ஐ.தே.க. சார்பு அரசியல் நிலைப்பாட்டால் தமிழர்களின் ஏகப் பிரதிநிதி தமிழ் தேசியக் கூட்டமைப்புதான் என்ற நிலையில் உடைவு ஏற்பட்டுள்ளது. இவர்களின் நிலைப்பாட்டால் ஏற்கெனவே இவர்களுக்கு எதிராக தீவிர தமிழ் தேசிய நிலைப்பாட்டை எடுத்து வந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கு சிறிது ஆதரவு அதிகரித்துள்ளதுடன், முன்னாள் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் தமிழ் மக்கள் கூட்டமைப்பு என்ற தீவிர தமிழ் தேசியவாத அமைப்பொன்றும் உருவாகியுள்ளது. இந்த இரு அணியினரும் வருங்காலத்தில் நடக்கவுள்ள தேர்தல்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கியை நிச்சயமாகப் பங்கிடப் போகிறார்கள். இதற்கான அத்தாட்சியாக கடந்த வருடம் பெப்ரவரியில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகள் வீழ்ச்சியடைந்ததைக் குறிப்பிடலாம்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, புலிகளின் பாசிசப் போக்கை ஆரம்பம் முதல் தொடர்ச்சியாகவும் விடாப்பிடியாகவும் உயிராபத்துகளுக்கு மத்தியில் எதிர்த்து வரும் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பிக்கு தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஒரு இடத்தை வழங்கி வருகின்றனர். இந்த உண்மை கடந்த உள்ளூராட்சி தேர்தலில் ஈ.பி.டி.பியின் வாக்கு வங்கியின் அதிகரிப்பு எடுத்துக் காட்டியிருக்கிறது. புலி எதிர்ப்பு அரசியல் தமிழ் மக்களிடையே வளர்ச்சி கண்டு வருகிறது என்ற உண்மை இதன் மூலம் சுமந்திரனுக்கு தெளிவாகியிருக்கிறது.

இந்த நிலைமைகளையெல்லாம் கூட்டிக்கழித்து கணக்குப் பார்த்த சுமந்திரனின் அப்புக்காத்து மூளை சில முடிவுகளுக்கு வந்திருக்கிறது. அதாவது புலிகளுக்கு சார்பான தீவிர தமிழ் தேசியவாத அரசியலை மட்டும் நம்பி அரசியல் செய்தால் எதிர்காலத் தேர்தல்களில் வெற்றியீட்டுவது சிரமம். எனவே கஜேந்திரகுமாரும் விக்னேஸ்வரனும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிடமிருந்து உடைக்கப் போகும் வாக்குகளை ஏதாவது ஒரு விதத்தில் ஈடு செய்வதானால் ஈ.பி.டி.பியின் புலி எதிர்ப்பு வாக்குளில் ஒரு பகுதியை உடைப்பதைத் தவிர கூட்டமைப்புக்கு வேறு வழியில்லை என்ற முடிவுக்கு சுமந்திரன் வந்திருக்கிறார்.

அதன் காரணமாகவே சுமந்திரன் இப்பொழுது புலி எதிர்ப்பு வேசம் கட்டி ஆடத் தொடங்கியிருக்கிறார். தவிர, அவர் புலிகளின் பாசிசப் போக்கை காலம் கடந்து உணர்ந்ததாவது இப்பொழுது ஞானம் பெற்றிருக்கிறார் என யாராவது தப்புக்கணக்குப் போட்டால் அது அவரின் தவறே தவிர சுமந்திரனின் தவறு அல்ல.

# வைத்தியக் கலாநிதி ரவி பெருமாள்பிள்ளை மறைவுக்கு ‘வானவில்’ தனது அஞ்சலியைச் செலுத்துகிறது

**இ**லங்கையின் புகழ்பூத்த மைந்தர்களில் ஒருவரான வைத்தியக் கலாநிதி ரவி பெருமாள்பிள்ளை 2018 டிசம்பர் 9ஆம் திகதி கொழும்பில் காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட ரவியின் தந்தையாரான பெருமாள்பிள்ளை ஐ.நாவில் பல உயர் பதவிகளை வகித்த ஒருவராவார்.

ரவி தனது ஆரம்பக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியில் பயின்றார். பின்னர் தனது மருத்துவ உயர் கல்வியை இங்கிலாந்தில் உள்ள ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் முடித்துக் கொண்டு இருதய சத்திர சிகிச்சை நிபுணராக வெளியேறினார். பின்னர் இலங்கை திரும்பி யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலை உட்பட பல வைத்தியசாலைகளில் மருத்துவராகப் பணி புரிந்தார்.

அவர் இலங்கையின் வடக்கு கிழக்கில் இருதய சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்காக Oxonian Heart Foundation என்ற அமைப்பை நிறுவியதுடன், 2014 முதலாவது இருதய சத்திரசிகிச்சையையும் மேற்கொண்டார். இங்கிலாந்திலும் இலங்கையிலும் இருதயம் சம்பந்தமான துறையில் அவர் அரிய பல சாதனைகளை நிகழ்த்தினார்.

தமது இறுதிக் காலத்தில் யாழ்ப்பாணம் திரும்பிய அவர் வேலணையில் 10 ஏக்கர் கரடுமுரடான நிலத்தை வாங்கி அதைப் பண்படுத்தி வெற்றிகரமான விவசாயத்தில் ஈடுபட்டார். தமது இளமைக் காலத்தில் இருந்து ஏற்பட்ட விவசாயம் மீதான ஈர்ப்பு அவருக்கு இந்த விவசாய நாட்டத்தை ஏற்படுத்தியது.

2020 முதல் வர்த்தக நோக்கங்களுக்காக புகையிலை செய்வதை அரசாங்கம் தடை செய்ய உள்ளதால், அதற்குப் பதிலாக மனிதர்களுக்கு பயன் தரும் மாற்றுப் பயிர்களை மக்கள் உற்பத்தி செய்ய வேண்டும் என அவர் வலியுறுத்தி வந்தார். அதனால் அவர் தனது வேலணை பண்ணையில் மருத்துவக் குணமுள்ள கற்றாளை மற்றும் பழ வகைகளைச் செய்வதில் நாட்டம் செலுத்தினார்.

டொக்டர் ரவி அரசியலைப் பொறுத்தவரையில் முற்போக்கு சிந்தனைகளைக் கொண்டிருந்தார். இங்கிலாந்தில் மருத்துவக் கல்வியை முடித்துக் கொண்டு இலங்கை திரும்பிய காலத்தில் 1972இல் உருவான இலங்கை மார்க்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து வேலை செய்தார். அந்தக் காலகட்டத்தில் இலங்கையின் விவசாயப் பிரச்சினைகள் பற்றி பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதி கட்சி அணிகள் மத்தியில் சுற்றுக்கு விட்டார்.

ரவியின் மனைவி சாந்தி இலங்கையின் புகழ்பூத்த ஜெயவர்த்தன குடும்பத்தைச் சேர்ந்தவராவார்.

ரவி அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு ‘வானவில்’ தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவருக்கு தனது இதயபூர்வமான அஞ்சலியையும் செலுத்துகின்றது.

**முன்பக்கத் தொடர்ச்சி...**

சபைக்கு வராமல் தவிர்த்துள்ளனர் என்பது தெளிவாகின்றது. அதன் மூலம் ஐ.தே.க. உறுப்பிர்கள் பலருக்கும் கூட மனோ கணேசன் குறிப்பிட்டவாறு இந்த புதிய அரசியல் அமைப்பு வருவதில் உடன்பாடு இல்லை என்பது தெளிவாகின்றது.

அரசாங்கத் தரப்பின் நிலை இப்படி இருக்க, புதிய அரசியலமைப்பு எப்படியும் வரும் என்றும், அதன் மூலம் தமிழர்களின் பிரச்சினை தீரும் எனவும் உறுதிபடப் பிரச்சாரம் செய்து வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பை பொறுத்த வரையிலும் அதன் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ இந்த புதிய அரசியல் அமைப்பை நிராகரித்துள்ளது.

இந்த நிலையில், புதிய அரசியல் அமைப்பு ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அது மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டு, பின்னர் பொதுமக்களின் கருத்துக் கணிப்புக்கு விடப்பட்டு, வெற்றிகரமாக நிறைவேற்றப்படும் என்பதை ஒரு சிறுபிள்ளை தன்னும் நம்புமா?

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, இந்த புதிய அரசியல் அமைப்பை ஐ.தே.க. அரசாங்கம் என்ன நோக்கத்துக்காக கொண்டு வருகின்றது என்பது முக்கியமாகும்.

தற்போது நடைமுறையிலுள்ள அரசியல் அமைப்பும் இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் மாமனாரான 'அரசியல் குள்ளநரி' ஜே.ஆர். ஜெயவர்த்தனவினால் 1978ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டதாகும். அப்போது ரணில் விக்கிரமசிங்க இளைஞர்கள் அலுவல்கள் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சராக இருந்தார். அந்த அரசியல் அமைப்பு கொண்டு வரப்பட்ட சமயம் அது ஜனநாயக விரோதமானது, எதேச்சாதிகாரமானது எனக் கூறி, அதை நீக்கும்படி அன்றிலிருந்து பல அரசியல் கட்சிகளும் பொது அமைப்புகளும் தொடர்ச்சியாகக் குரல் எழுப்பிய போதிலும் ஐ.தே.க. அதற்குச் செவிசாய்க்கவில்லை. ஆனால் இப்பொழுது மட்டும் ஐ.தே.க. அதை மாற்றுவதற்கு ஆர்வமாக இருப்பது என்ன காரணத்திற்காக?

1990ஆம் ஆண்டு ஐ.தே.கவைச் சேர்ந்த ஆர்.பிரேமதாச புலிகளால் படுகொலை செய்யப்பட்ட பின்பு, கடந்த 29 வருட காலத்தில் அக்கட்சியைச் சேர்ந்த எவராலும் ஜனாதிபதியாக வர முடியவில்லை. இனிமேலும் வருவதற்கான வாய்ப்புகள் இல்லை. இந்தச் சூழ்நிலையில் நாடாளுமன்றத் தேர்தலில் தப்பித்தவறி வெற்றி பெற்றாலும், இன்னொரு கட்சியைச் சேர்ந்தவர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருக்கும்வரை ஐ.தே.க. அரசால் தான் நினைத்ததைச் செய்ய முடியாத நிலைதான் இருக்கும்.

எனவே, புதிய அரசியல் அமைப்பின் மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கி நாடாளுமன்றத்துக்கு அந்த அதிகாரங்களை வழங்குவதன் மூலம், ஐ.தே.க. தான் நினைத்ததை நாடாளுமன்றத்தின் மூலம் சாதித்துக் கொள்ள முடியும் என நினைக்கிறது. அது அப்படி நினைப்பதற்கு காரணமும் இருக்கின்றது.

சில சந்தர்ப்பங்களில் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் தனித்து ஆட்சி அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மை கிடைக்காது போனால், ஐ.தே.க. 1965இல் செய்தது போல அல்லது சமீபத்தில் செய்தது போல, தன்னையொத்த அரசியல் கருத்துள்ள, தன்னுடன் எப்பொழுதும் கூட்டு வைத்துள்ள, வலதுசாரித்தனமான தமிழ் - முஸ்லீம் - மலையக கட்சிகளின் ஆதரவுடன் நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியமைத்துவிட முடியும் என ஐ.தே.க. திடமாக நம்புகிறது. எனவேதான் புதிய அரசியல் அமைப்பு ஒன்று கொண்டுவர வேண்டும் என்பதில் ஐ.தே.க. குறியாக உள்ளது.

சரி, அப்படி புதிய அரசியல் அமைப்பு ஒன்றின் மூலம் தனது கைகளில் அதிகாரத்தை எடுப்பதன் மூலம் ஐ.தே.க. என்னத்தைச் சாதிக்க விரும்புகின்றது. நாட்டினதும் மக்களினதும் நலனுக்காக எதையாவது செய்ய விரும்புகிறதா? அல்லது புதிய அரசியல் அமைப்பின் மூலம் நாட்டில் நீண்டகாலமாகப் புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்புகிறாதா? ஆனால் உண்மை இவை எதுவுமேயல்ல.

ஐ.தே.க. கொள்கைகள் என்னவென்பது நாட்டு மக்கள் அனைவரும் அறிந்தவைதான். அதாவது, நாட்டு நலனையோ மக்களின் நலனையோ அல்லது ஒடுக்கப்பட்ட சிறுபான்மை இனங்களின் நலன்களையோ அடிப்படையாகக் கொண்டவையாக ஐ.தே.கவின் கொள்கைகள் ஒருபோதும் இருந்ததில்லை.

ஐ.தே.க. பதவியில் இருந்த காலங்களில் எல்லாம் நாட்டின் தேசிய சுதந்திரம், சுயாதிபத்தியம், பிரதேச ஒருமைப்பாடு என்பனவற்றை பாதிப்புக்குள்ளாக்கும் நவடிக்கைகளையே எடுத்து வந்திருக்கிறது. அதாவது, மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளின் அரசியல், பொருளாதார, இராணுவ நலன்களுக்காகவே ஐ.தே.க. அரசுகள் செயல்பட்டு வந்திருக்கின்றன.

மறுபக்கத்தில் ஐ.தே.க. அரசுகள் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற உலக ஏகாதிபத்திய வட்டிக் கடைக்காரர்களின் உத்தரவுப்படி செயல்பட்டு நாட்டு மக்களின் மேல் ஏராளமான பொருளாதாரச் சுமைகளையும் ஏற்றி வந்திருக்கின்றன. அப்படியான ஒரு சூழ்நிலையில்தான் 1953 ஓகஸ்ட் 12 ஹர்த்தால் மூலம் டட்லி சேனநாயக்க தலைமையிலான அன்றைய ஐ.தே.க. அரசை மக்கள் பதவியிலிருந்து விரட்டியடித்தனர்.

சிறுபான்மை இனங்களின் இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்திலும் ஐ.தே.கதான் 1958, 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் தமிழ் மக்களின் மீது இன வன்செயலை நேரடியான முன்னின்று நடத்திய கட்சியாகும். அதுமட்டுமின்றி, இனப் பிரச்சினையை 30 ஆண்டுகால கொடூரப் போராக மாற்றிய கட்சியும் ஐ.தே.க. கட்சிதான். அதுதவிர, இலங்கை சுதந்திரமடைநத் உடனேயே மலையகத் தமிழ் மக்களின் பிராஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கியதும் ஐ.தே.க.தான். வடக்கு கிழக்கில் தமிழ் – முஸ்லீம் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து வைத்ததும் ஐ.தே.கதான்.

அதுமாத்திரமின்றி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகளால் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகளாக 1957இல் செய்து கொள்ளப்பட்ட பண்டா – செல்வா ஒப்பந்தத்தையும், 2000 ஆண்டில் சந்திரிக அரசு கொண்டு வந்த தீர்வுத்திட்டத்தையும் நடைமுறைப்படுத்தவிடாமல் தடுத்ததும் ஐ.தே.கதான்.

எனவே இத்தகைய ஐ.தே.கவினால் தலைமை தாங்கப்படுகின்ற ஒரு அரசு கொண்டு வருகின்ற ஒரு புதிய அரசியல் அமைப்பினால் நாட்டினதும், மக்களினதும். சிறுபான்மை இனங்களினதும் நலன்கள் பாதுகாக்கப்படும் என்று யாராவது நம்ப முடியுமா?

உண்மை என்னவெனில், தற்போதைய சூழ்நிலையில் புதிய அரசியல் அமைப்பொன்று நிறைவேற்றப்படுவதற்கான சாத்தியம் இல்லை என்பது ஒருபுறமிருக்க, அப்படியொரு அரசியல் அமைப்பால் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்பதும் சாத்தியமில்லை.

தற்போதைய ஐ.தே.க. அரசால் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய அரசியல் அமைப்பென்பது 1978 அரசியல் அமைப்பின் இன்னொரு நகலே தவிர வேறொன்றுமல்ல.

# இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடாதீர்! மேற்கு நாடுகளிடம் பொழும்பு பேராயர் வேண்டுகோள்!!

இலங்கையில் மதம் மற்றும் இனம் சம்பந்தமான சில பிரச்சினைகள் இருக்கின்றன. இவை எமது மதங்கள் போதித்த ஆன்மீக வழிகாட்டல்கள் மூலம் தீர்வு காணப்படக்கூடியவை.

இந்த விடயங்களில் தேவையில்லாத அந்நியத் தலையீடுகள் விரும்பத்தகாதவையாகும்.

இவ்வாறு கூறியிருக்கிறார் கொழும்பு மறை மாவட்டப் பேராயர் மல்கம் கார்டினல் ரஞ்சித். வணக்கத்துக்குரிய பனகல உபதிஸ்ஸ தேரோவின் சுயசரிதை நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே கொழும்பு பேராயர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார். அவர் தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிடுகையில்,

மேற்கு நாடுகள் இலங்கை ஒரு தீவிர நாடு என சிணுங்கிக் கொண்டும், முனகிக் கொண்டும், தமது பொருளாதார பலத்தைச் சக்திப்படுத்துவதற்காக நாசகார விடயங்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நாடுகள் இலங்கையை மேலும் சீரழிக்காமல் தமது சொந்த விவகாரங்களைக் கவனித்துக் கொள்வது நல்லது.

வெளிநாடுகள் இலங்கையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறும் சில சம்பவங்களை வைத்துக் கொண்டு, இலங்கையில் வாழும் மக்கள் காட்டுமிராண்டிகள் என முத்திரை குத்தி இலங்கையின் பிம்பத்தைக் கெடுக்கப் பார்க்கிறார்கள். இது ஒரு மோசமான நிலைமையாகும்.

இலங்கையில் பல்வேறு இனங்கள் மற்றும் மதங்களைச் சார்ந்தவர்கள் வாழ்ந்த போதிலும் அவர்கள் சகோதரத்துவத்துடனும் ஒற்றுமையுடனும் வாழ்கின்றனர்.



ஒருசில சம்பவங்களைத் தவிர எந்தவொரு மதமும் தாக்குதலுக்காக இலக்கு வைக்கப்படுவதில்லை. மக்கள் மத்தியில் உள்ள வேற்றுமைகள் காரணமாகவே சில சம்பவங்கள் நிகழ்கின்றன. அதை வைத்துக் கொண்டு இந்த நாடு மற்றைய மதங்கள் மீது வேறுபாடு காட்டும் அபாயகரமான ஒரு நாடு என படம் பிடித்துக் காட்ட முயல்கின்றனர். இந்த மாதிரியான சிறிய விடயங்கள் மற்ற நாடுகளிலும் இல்லாமல் இல்லை.

ஆனால் சில நாடுகள் இத்தகைய சம்பவங்களை வைத்துக் கொண்டு இலங்கை ஒரு தீவிரவாத நாடு என்றும், பௌத்த மதம் ஒரு தீவிரவாத மதம் என்றும் காட்ட முயல்கின்றனர். நாங்கள் இந்த நாட்டில் மத நல்லிணக்கத்துடன் வாழ்கின்றோம். மற்றவர்களின் தேவைக்காக நாம் பிரிந்து நிற்க முடியாது. இந்த நாட்டை ஒரு மரத்துக்கு ஒப்பிட்டால் பௌத்த மதம் அதன் அடிமரம் போன்றது. மற்றைய மதங்களைப் பின்பற்றுபவர்களால் உருவாக்கப்பட்டுள்ள கிளைகள் அடி மரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நாங்கள் எல்லோரும் சமாதானமாக இந்த நாட்டில் வாழ்கின்றோம்.

எங்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் உண்மைக்குப் புறம்பானவையும், பொய்யானவையும் என நாம் உலகின் முன் பிரகடனம் செய்கின்றோம். எனவே எங்கள் மீது அவ்வாறான குற்றச்சாட்டுகளைச் சுமத்தாதீர்கள். எமது மதங்கள் வழங்கும் வழிகாட்டலின் அடிப்படையில் எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ள முடியும். எனவே எமது நாட்டை காட்டுமிராண்டித்தனமான நாடு என்று சொல்லாதீர்கள். எம்மிடம் காட்டுமிராண்டித்தனமான கலாச்சாரம் இல்லை. அப்படிச் சொல்பவர்கள் எமக்கிடையில் உள்ள பிரச்சினைகளைப் பயன்படுத்தி தமது ஆயுதங்களை எமக்கு விற்பனை செய்வதை அனுமதிக்க முடியாது.

அவர்கள் எமது நாட்டின் அடையாளத்தை மதிக்க வேண்டும். இதை நாம் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். சமாதானம் மற்றும் சகவாழ்வு சம்பந்தமான பிரச்சினைகளை எம்மால் தீர்த்துக்கொள்ள முடியும். நீங்கள் எங்கள் விவகாரங்களில் தலையிட வேண்டிய தேவை இல்லை.

உங்களால் முடிந்தால் எமக்கு உதவுங்கள். முடியாவிட்டால் உங்கள் விவகாரங்களைக் கவனியுங்கள். எமது நாட்டுக்கு வந்து நிலைமைகளைக் குழப்ப வேண்டாம். இதையே நாம் உலகத்துக்குச் சொல்ல விரும்புகிறோம்.

இவ்வாறு கொழும்பு மறை மாவட்டப் பேராயர் மல்கம் கார்டினல் ரஞ்சித் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

*"படையாண்மைக்கு (இராணுவ தர்பாருக்கு) எதிரான போராட்டத்தை சமூகவுடைமை நோக்கிய வர்க்கப் போராட்டத்திலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. முதலாளித்துவ அரசுகளுக்கு இடையே நிகழும் போர்கள், உலக சந்தைகளைப் பற்றிகொள்வதற்கு அவை போட்டியிடுவதன் பெறுபேறே. அதில் அந்நிய மக்களும், அந்நிய தேசங்களும் அடிமைகொள்ளப்படுகின்றன. ஆதலால் போர்கள் முதலாளித்துவத்தின் உள்ளார்ந்த இயல்பாகும். முதலாளித்துவப் பொருளாதாரம் ஒழிக்கப்பட்ட பின்னரே போர்கள் ஒழியும். போர் மூள்வதைத் தடுப்பதற்கு இயன்றவரை பாடுபடுவதே உழைக்கும் வர்க்கத்தின், அவர்தம் நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் கடமை. அதனை மீறிப் போர் மூண்டால், போரினால் ஏற்படும் பொருளாதார, அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்தி, மக்களைக் கிளர்ந்தெழச்செய்து, முதலாளித்துவ வர்க்க ஆட்சியை ஒழிப்பது அவர்தம் கடமை"*

***-1907 ஆம் ஆண்டு ஜெர்மனியின் ஸ்ருட்காட் நகரில் நடந்த சர்வதேச சமூகவுடைமையாளர் மகாநாட்டில் லெனினும் ரோசா லக்சம்பேர்க்கும் சேர்ந்து முதலாம் உலகப்போருக்கு எதிராக முன்வைத்த தீர்மானம்.***

# இதுதான் 'சம்பந்தன் ஜனநாயகம்' போலும்!

கடந்த வருடம் ஒக்ரோபர் 26ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை பிரதமர் ஆக்கியதும், அவருக்கு நாடாளுமன்றத்தில் போதிய பெரும்பான்மை இல்லாத நிலையில் திரும்பவும் ரணிலை பிரதமராக்கியதும் முடிந்துபோன கதை.

இந்த அரசியல் குழப்பங்களின் போது ரணிலை மீண்டும் பிரதமராக்குவதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முக்கியமானதும் தீவிரமானதுமான ஒரு பாத்திரத்தை வகித்தது. குறிப்பாக சம்பந்தனும் அவரது சகாவான சுமந்திரனும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்கள் போலவே செயற்பட்டனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 14 உறுப்பினர்களின் கையெழுத்து அடங்கிய ஆதரவுக் கடிதம் இல்லாதுவிட்டால் ரணில் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மீண்டும் அமைந்திருக்க வாய்ப்பே இருந்திருக்காது.

ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு செய்த நரித்தனமான வேலைகளால் மறுபக்கத்தில் சம்பந்தன் வகித்து வந்த போலித்தனமான எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழக்க வேண்டி வந்துவிட்டது. காரணம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஐ.தே.கவுடனான தேசிய அரசாங்கத்தில் இருந்து விலகிவிட்டதால், அவர்களது 98 உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொண்டனர். எனவே இயல்பாகவே 14 உறுப்பினர்களிடம் இருந்த எதிர்க்கட்சிப் பதவி 98 பேர் அடங்கிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிடம் போய்விட்டது. ஏற்கெனவே அரசியல் குழப்பங்களின் போது நாடாளுமன்ற நெறிமுறைகளை மீறி பக்கச் சார்பாக ஐ.தே.கவுக்கு ஆதரவாகச் செயற்பட்ட சபாநாயகர் கருஜெயசூரிய தன்மீது உள்ள கறையைப் போக்குவதற்காக மகிந்த ராஜபக்சதான் எதிர்க்கட்சித் தலைவர் என்று அறிவித்தும் விட்டார்.




ஆனால் பதவி சுகத்தை விட மனம் இல்லாத சம்பந்தனும் அவரது சீடப்பிள்ளை சுமந்திரனும் தாம்தான் இன்னமும் எதிர்க்கட்சித் தலைவர் என்று சொல்லிக் கொண்டு, நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தையும், வெளியில் உள்ள காரியாலயத்தையும், எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தையும் ஆக்கிரமித்து வைத்திருந்தனர். இத்தகைய ஒரு சின்னத்தனமாக செயல்பாடு அ.அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது கூட நடைபெறவில்லை.

இதில் வேடிக்கை என்னவென்றால், தனது எதிர்க்கட்சித் தலைவர் பதவி பறிபோனதும், இது சிங்களப் பேரினவாதம் தொடர்ந்து கடைப்பிடித்து வரும் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளின் தொடர்ச்சி என சம்பந்தன் நாக்கூசாமல் புலம்பினதுதான். ஏண்ணிக்கையின் அடிப்படையில் நியமிக்கப்படும் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கும் சிங்களப் பேரினவாதத்துக்கும் என்ன தொடர்பு என்று விளங்கவில்லை.

ரணிலுக்கு பெரும்பான்மை இருக்க பெரும்பான்மை இல்லாத மகிந்தவை பிரதமராக்கியது ஜனநாயக விரோதம் என்று கூப்பாடு போட்ட சம்பந்தனும் அவரது சகாக்களும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிடம் பெரும்பான்மை இருக்க அதற்குக் கிட்டவும் நெருங்க முடியாத தமக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவி வழங்கப்படவில்லை எனக் கூப்பாடு போடுவதும், அதற்கு சிங்களப் பேரினவாதத்தை துணைக்கு இழுப்பதும் என்ன வகையான ஜனநாயகம் என்று தெரியவில்லை.

இப்படியான ஜனநாயத்துக்கு இனிமேல் "சம்பந்தன் ஜனநாயகம்" எனப் பெயர் வைத்து அழைத்தால் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

**சயந்தன்**

---

'அறிவியலின் பாற்பட்ட காட்டியல், தோட்டச்செய்கை, பயிர்ச்செய்கையால் பூச்சி புழுக்களும் அவற்றின் கூடுகளும், உணவு வகைகளும் ஒழிந்துவிட்டன. நவீன முறைகளால் வெளிகளும், பொந்து மரங்களும், சுள்ளிகளும், இலைதழைகளும் அருகி வருகின்றன. இதை நினைந்து, உள்ளம் வெந்து புண்ணாகின்றது'

'கம்யூனிஸ்ட்கள் தங்கள் கடமையைச் சரியாகச் செய்ய தவறுகிறபோது வழங்கப்படும் தண்டனைதான் பாசிசம்'

**-ரோசா லக்சம்பேர்க்**